# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN

## நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்

மத்தேயு 5:13



THE TAMIL DISTRICT COUNCIL OF THE SIAG

September - October 2022
Volume : 62

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 5

# 74th Annual Conference, Madurai























ஆசிரியரிடமிருந்து........!



# நீங்கள் பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இயேசுவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

நமது ஆண்டவராகிய இயேசு நம்மை பார்த்து "**நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்**", என்று கூறுகிறார் (மத்தேயு 5:13). நீங்கள் உப்பைப் போல் இருக்கிறீர்கள் என்றோ, உப்பைப் போல் இருந்தால் நலமாயிருக்கும் என்றோ இயேசு கூறவில்லை. மாறாக "நீங்கள் உப்பாக இருக்கிறீர்கள்" என்று கூறுகிறார். ஏன்? உப்பின் பண்புகள், பயன்கள், அதின் அவசியம், மேன்மை என்ன என்பதைப் பற்றி நாம் தெளிவாக அறிந்து கொண்டால், "நீங்கள் உப்பாயிருக்கிறீர்கள்" என்று நம்மை பார்த்து இயேசு கூறியதன் காரணத்தை புரிந்து கொள்ள முடியும்.

உப்பு நாம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் ஒரு அத்தியாவசியமான பொருள். இயேசு இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் உப்பு மிகவும் விலையேறபெற்ற ஒரு பொருளாக கருதப்பட்டது. முற்காலத்தில் வேலைக்குரிய ஊதியமாக உப்பு வழங்கப்பட்டது என சரித்திர குறிப்புகள் கூறுகின்றன. உப்பு சுமார் 14,000 வகையான பயன்களை உடையது என்று கலைக்களஞ்சியம் (Encyclopedia) பதிவு செய்கிறது. இவ்வளவு சிறப்புகள் வாய்ந்த உப்பாக நாம் எப்படி வாழலாம் என்பதைப்பற்றி உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

## 1. பிரித்தெடுக்கப்பட்ட வாழ்வு (SEPARATION)

உப்பு என்பது கடல் நீரிலிருந்து பிரித்து எடுக்கப்படும் ஒரு பொருள். அது கடல் நீருடன் கலந்திருக்கும்வரை எதற்கும் பயன்படாது. ஆனால் பிரித்தெடுக்கப்பட்ட பின்போ மிகவும் பயனுள்ளதாக மாறுவதை காண்கிறோம். அதை போலவே நாமும் உலகத்தோடு இரண்டற கலந்து வாழும் வரை தேவனுக்கென்று பயன்பட முடியாது. நாம் தேவனுக்கு பயன்பட வேண்டும் என்ற காரணத்தினால்தான் அவர் நம்மை வேறு பிரித்தார். "நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டேன்" என்று இயேசு கூறினார் (யோவான் 15:19). உலகத்திலிருந்த நம்மீது நீதியின் சூரியனை உதிக்கச் செய்து, உலக கடலிலிருந்து வேறுபிரித்து, உப்பாக நம்மை மாற்றியிருக்கிறார் (2 கொரி.4:6). பிரித்தெடுக்கப்பட்ட நம் வாழ்வின் முத்திரை பரிசுத்தமே. தூய்மையான உப்புதான் பயனுள்ளது. உப்பின் வெண்மையான நிறமும் தூய்மையின் அடையாளமாக இருக்கிறது. பரிசுத்தமுள்ள மனிதன் தேவனுடைய கரத்திலே பயன்படும் வல்லமையான கருவியாக இருக்கிறான் என்று A.W. டோசர் என்ற தேவ மனிதர் கூறுகிறார். ஆம், கறையற்ற, பரிசுத்தமான வாழ்வு வாழ நம்மை அர்ப்பணிப்போம்.

## 2. சாரமுள்ள வாழ்வு (SALTINESS)

உப்பை மதிப்பிற்குரியதாய் ஆக்குவது அதன் சாரம்தான். உப்பின் சாரம் என்றால் அதன் உவர்ப்புத் தன்மையைக் குறிக்கிறது. அப்படியானால் நம் வாழ்வில் சாரம் என்பது எது? ஆண்டவராகிய இயேசு மத்தேயு 5ம் அதிகாரம் 3 முதல் 12 வசனங்களில் பட்டியலிடும் குணங்கள்தான் நமது கிறிஸ்தவ வாழ்வை சாரமுள்ளதாக்குகின்றன. தாழ்மை, சாந்தம், இரக்கம், பொறுமை, சமாதானம், பரிசுத்தம், தேவ நீதி, விசுவாசம், அன்பு ஆகிய இயேசுவின் திவ்விய குணங்கள் நம் வாழ்வில் காணப்பட வேண்டும். இவைகளை நாம் தினசரி வாழ்வில் கடைபிடிக்க வேண்டும். நாம் எப்படி இருக்கிறோம்? சமாதானம் பண்ணுகிறவர்களாகக் காணப்படுகிறோமா? (மாற்கு 9:50). நம் வார்த்தைகள் எப்படி இருக்கின்றன? ''உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும், உப்பால் சாரமேறினதாயும் இருப்பதாக" என்று வேதம் அறிவுறுத்திகிறது (கொலோ. 4:6).

''தாகத்தை ஏற்படுத்துதல்'' உப்பின் மற்றொரு பண்பாகும். பிரியமானவர்களே, நம் கிறிஸ்தவ வாழ்வு நம்முடன் பழகுபவர்களை கிறிஸ்துவை நோக்கி ஈர்க்கின்றதா? அவர் மேல் தாகம்/ஆவல் கொள்ள செய்கின்றதா? என்று சிந்திப்போம்.

உப்பு தன் சாரத்தை இழந்தால் என்ன ஆகும்? "உப்பானது சாரமற்று போனால் எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது" என்று இயேசு கூறுகிறார் (மத்தேயு 5:13; மாற்கு 9:50). உப்பு தன் சாரத்தை எப்படி இழக்கும்? காற்றில் உள்ள மாசுகளை கவர்ந்திழுக்கும் போதும், தான் வேறு பிரிக்கப்பட்ட நீருடன் மீண்டும் கலக்கும்போதும் அது தன் சாரத்தை இழந்து விடுகிறது. இதைப்போன்றே நாமும் உலக சிநேகம், இச்சைகள் இவற்றுக்கு மீண்டும் அடிமையானால் நம் சாரத்தை இழந்துவிடுவோம் என்று வேதம் நம் எச்சரிக்கிறது (2பேதுரு 2:20; 1 பேதுரு 1:14,15). இயேசுவால் பிரித்தெடுக்கப்பட்டிருந்தும், உலக ஆசையினால் அழிவிற்குள்ளான யூதாஸ்காரியோத்தின் வாழ்க்கை நமக்கு எச்சரிக்கையாக எழுதப்பட்டுள்ளது (மத். 26:14-16; 27:3-5).

## 3. சுவைதரும் வாழ்வு (SAVOUR)

உப்பின் அதிமுக்கியமான பயன்பாடு என்னவென்றால் உணவுக்கு சுவை தருவதாகும். "ருசியில்லாத பதார்த்தத்தை உப்பில்லாமல் சாப்பிடக்கூடுமோ?" என்று கேட்கிறார் பக்தன் யோபு (யோபு 6:6). "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்பது தமிழ் பழமொழி. உப்பு உணவிற்கு சுவையூட்டுவது போல, நாமும் மற்றவர்களுக்கு பிரயோஜனமாய் இருக்க வேண்டும். யோசேப்பைப் பற்றி "கனிதரும் திராட்சை செடி" என்று நாம் வாசிக்கிறோம் (ஆதி.49:22). அதாவது அவன் சுவை தருகிற உப்பாக திகழ்ந்தான் என்றும் சொல்ல முடியும். அவன் தன் தகப்பன் வீட்டில் இருந்த பொழுது, யாக்கோபுக்கு மிகவும் பிரியமான, கீழ்படிதலுள்ள குமாரனாக இருந்தான். அடிமையாக விற்கப்பட்ட பின்பும், போத்திபாரின் வீட்டில் உண்மையுள்ள ஊழியனாய் இருந்தான். சிறையில் வாடியபோதும், சிறைச்சாலை அதிகாரிக்கு உதவியாக, நம்பிக்கைக்குரியவனாக, பிற கைதிகளுக்கு ஆறுதலாக இருந்தான். கடைசியாக பார்வோன் வீட்டிற்கு வந்த பொழுது பார்வோனுக்கும், எகிப்து நாட்டிற்கும், அனைத்து நாடுகளிலும் கடும் பஞ்சத்தில் அகப்பட்ட மக்களுக்கு உணவு தானியங்களை விநியோகித்து துயர் துடைப்பவனாக இருந்தான் என்று அறிகிறோம்.யோசேப்பு எங்கே இருந்தாலும், தான் இருக்கும் இடத்தில் ஒரு

மாற்றத்தை ஏற்படுத்தி, நன்மைகளை கொண்டு வருகிறவனாக இருந்தான். யோசேப்பின் நிமித்தம் பிறருக்கு ஆசீர்வாதம் உண்டானது என்று வேதம் கூறுகிறது (ஆதி.39:5). அன்புக்குரியவர்களே, நம்முடைய வாழ்வு பிறருக்கு ஆசீர்வாதமாக இருக்கிறதா? நாம் மற்றவர்களுக்கு உதவியாக, ஆறுதலாக, மகிழ்ச்சியை தருகிறவர்களாக இருக்கிறோமா? என்று நம்மை நாமே ஆராய்ந்து நிதானிப்போமாக! நாம் நமது குடும்பத்திற்க்கும், சபைக்கும், வேலை செய்யும் இடத்திற்கும்,தேசத்திற்கும் ஆசீர்வாதங்களை கொண்டு வருகிற சுவைதரும் உப்பாக இருக்க வேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

## 4. பாதுகாக்கும் வாழ்வு (SECURITY)

உப்பின் இன்னொரு குணம் அதன் "பாதுகாக்கும்" தன்மை. முற்காலத்தில் உணவுப் பொருட்களைப் பதப்படுத்தவும், நீண்ட நாட்கள் கெட்டுபோகாமல் பாதுகாக்கவும் உப்பைதான் பயன்படுத்துவர். இன்றும் கூட உணவு பொருட்கள் நீண்ட காலம் கெடாமல் பாதுகாக்கப்பட உப்பு பயன்படுத்தப்படுகிறது. நீங்களும் நானும் மற்றவர்களை அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். இன்று நம்மை சுற்றிலும் எண்ணற்ற மக்கள் கெட்டு அழிவுக்கு நேராக போய் கொண்டிருக்கின்றனர். நாம் உப்பாக செயல்பட்டு அவர்களை அழிவினின்று பாதுகாக்க இரண்டு வழிகள் உண்டு. முதலாவதாக, நாம் மன்றாடி ஜெபிக்க வேண்டும். ஆதியாகமம் 18ம் அதிகாரத்தில் சோதோம் கொமோரா தேசங்களை தேவன் அழிக்க சித்தம் கொண்டபோது, தேவ மனிதனாகிய ஆபிரகாம் கர்த்தர் தேசத்தை அழிக்காதபடி மன்றாடி ஜெபித்தார் (ஆதி.18:20, 23-32). ஆபிரகாமின் ஜெபத்தின் நிமித்தம் லோத்துவின் குடும்பம் பாதுகாக்கப்பட்டது (ஆதி.19:29). இதைப் போலவே மோசேயும் மக்கள் அழிக்காதபடிக்கு தேவனிடம் கெஞ்சி பிரார்தனை செய்தார் (சங்கீதம் 106:23). தேவன் மோசேயின் ஜெபத்திற்கு செவிகொடுத்தார். கர்த்தர் இன்றும் தேசத்தின் பாதுகாப்பிற்காக, இரட்சிப்பிற்காக திறப்பில் நின்று மன்றாடும் மனிதர்களை தேடுகிறார் (எசே.22:30). நீங்களும் நானும் நம் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தேசம் அனைத்திற்காகவும் எப்பொழுதும் திறப்பில் நின்று மன்றாடி ஜெபிக்க வேண்டும். அப்பொழுது கர்த்தர் தேசத்தை பாதுகாப்பார். இரண்டாவதாக,நாம் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும்.ஒருவரும் கெட்டுபோகாமல் நித்திய ஜீவன் அடையும்படி தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பினார் என்ற நற்செய்தியை நாம் அறிவிக்க வேண்டும் (யோவான் 3:16). சீரிய படைத்தலைவன் நாகமானின் வீட்டில் வேலை செய்த அடிமை சிறுமி, தனது எஜமான் குஷ்டரோகத்திலிருந்து சுகம் பெறுவதற்கான வழியை, நற்செய்தியை அவனுக்கு சொன்னதினால் அவன் பாதுக்காக்கப்பட்டான் என்று காண்கிறோம் (2 இராஜா.5:3-14).இன்று பாவம் என்ற கொடிய நோயால் வருந்தும் மக்களின் ஆத்துமாவை விடுவிக்கவும், அவர்களை நித்திய நரகம் எனும் அழிவினின்று பாதுகாக்கவும் நாம், இயேசுவே ஆண்டவர், இரட்சகர், மீட்பர், வழி, ஒளி, சத்தியம், ஜீவன் என்ற சுவிசேஷத்தை அவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

## 5. சமுதாய வாழ்வு (SOCIABLENESS)

உப்பு சுவையூட்டுவதாக, பாதுகாப்பதாக பயன்பட வேண்டும் எனில் அது தான் இருக்கும் ஜாடியை விட்டு வெளியேறி உணவுக்குள், ஊறுகாய்க்குள் ஊடுருவவேண்டும். உப்பு ஜாடிக்குள்ளேயே அடைந்து கிடந்தால் அது சாத்தியமில்லை. அது மாற்றத்தை, சுவையை, பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டிய ஆகாரத்திற்குள் ஊடுருவி செல்லும் போதுதான் விரும்பத்தக்க அவசியமான விளைவுகளை ஏற்படுத்த முடியும்.

நாமும் வீட்டுக்குள்ளேயே. சபையின் நான்கு சுவருக்குள்ளேயே முடங்கி கிடந்தால் உப்பாக உபயோகப்பட முடியாது. இயேசு நம்மை நோக்கி, "நீங்கள் வீட்டிற்கும், சபைக்கும் உப்பாக இருக்கிறீர்கள்" என்று சொல்லவில்லை. மாறாக, "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்றார். எனவே நாம் வசிக்கும் பகுதியிலுள்ள அக்கம் பக்கத்தினரிடம் பழகி, அவர்களுடன் நட்புகளை ஏற்படுத்த வேண்டும். பாவிகள் என்று யாரையும் ஒதுக்கி தள்ளக்கூடாது. நம் ஆண்டவர் இயேசு அப்படிதான் வாழ்ந்தார். இயேசு ஆயக்காரருடனும் பாவிகளுடனும் பரிவுடன் பழகினார். எனவேதான் அவர் "பாவிகளின் சிநேகிதன்" என்று அழைக்கப்பட்டார் (மத்தேயு 11:17). இயேசு பாவமின்றி பரிசுத்தமாய் தன்னை காத்துக்கொண்டார். அதே வேளையில் பாவிகளை தம் அன்பினால், நட்பினால் தேவ இராஜ்ஜியத்திற்குரியவர் களாகும்படி வென்றார். மத்தேயு, சகேயு போன்ற எண்ணற்றோர் இவ்வரிசையில் அடங்குவர் (மத்.9:9-10, லூக்கா 19:1-10). நாமும் இயேசு இராஜனின் அடிச்சுவடுகளை, முன்மாதிரியை பின்பற்றி சமுதாயத்திற்குள் ஊடுருவி அநேக ஆத்துமாக்களை ஆதாயம் செய்வோம்.

## 6. தியாக வாழ்வு (SACRIFICE)

இறுதியாக உப்பு தன் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால் அது முற்றிலும் கரைய வேண்டும். கரைந்து உணவில் சுவையூட்டி மறைந்து போக வேண்டும். நாமும் இவ்வாறே பிறருக்காக தியாகம் செய்கிறவர்களாக, விட்டுக்கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும். இதிலும் கர்த்தராகிய இயேசுவே நமக்கு சிறந்த முன்மாதிரி. இயேசு தம்மையே சிலுவையில் தியாகமாக ஒப்புகொடுத்தார். தியாகம் செய்ய தயாராய் இருப்பவர்களைத்தான் தேவன் பயன்படுத்த முடியும். "மெய்யாகவே கோதுமை மணி நிலத்தில் விழுந்து மடிந்தால் அது மிகுந்த பலனை கொடுக்கும். சாகாவிட்டால் அது பலன் தராது" என்று இயேசு கூறுகிறார் (யோவான் 12:24). இன்று நம் இந்தியா கல்வி, கலாச்சாரம், மருத்துவம், மொழி, கலை, இலக்கியம், வாழ்க்கைத்தரம் ஆகியவற்றில் முன்னேறி இருப்பதற்குக் காரணம் நம் நாட்டிற்கு வந்து சுவிசேஷம் அறிவித்து, அல்லும் பகலும் அயராமல் உழைத்த கிறிஸ்தவ மிஷனரிகளின் ஒப்பற்ற தியாகம்தான். இவர்கள் அனைவரும் கல்வியறிவு பெற வழி செய்ததுமன்றி, இந்தியாவில் காணப்பட்ட குழந்தை திருமணம், 'சதி' என்ற உடன்கட்டை ஏறுதல், தேவதாசி முறை, பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள், பெண் கல்வி மறுப்பு போன்ற பற்பலசமுதாய அவலங்களுக்கு அரும்பாடுப்பட்டு முற்றுப்புள்ளி வைத்தனர். மேலும் மருத்துவதுறையிலும் தொழுநோயாளிகள், காச நோயாளிகள் மறுவாழ்வு பெறவும் இவர்கள் ஆற்றிய தொண்டு மகத்தானது. இப்பணிகளை செய்ய தங்கள் பணம், பொருள், இளமை, இன்னுயிர் அனைத்தும் அவர்கள் தியாகம் செய்தனர். பிஷப். ஸ்டீபன் நீல் என்ற தேவமனிதன் இவ்வாறாக கூறுகிறார், **"எங்கெல்லாம் கலாச்சாரம் முன்னேறியிருக் கிறதோ, மக்களின் மனக்கண்கள் திறக்கப்பட்டிருக்கிறதோ அந்த பூமியை தோண்டி பாருங்கள். அங்கே மிஷனரிகளின் சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கும்".**

இன்று சீரழிந்து போய் கொண்டிருக்கிற நம் தேசத்திற்காக நாம் எப்பொழுதும் ஜெபிக்க வேண்டும். சுவிசேஷம் அறிவித்து நரகத்திற்கு விரையும் ஆத்துமாக்களை காக்க வேண்டும். கிறிஸ்து இயேசுவின் சாரத்தால் நிறைந்து வழிய வேண்டும். தியாகம் செய்ய ஆயத்தமாய் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட பயனுள்ள உப்பாக நாம் வாழ கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி தெற்கு மண்டலம்.



# இயேசு கிறிஸ்துவின் வருகையும் உலக முடிவும் அதிசீக்கிரம்


**Rev. P.S. ராஜமணி**

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020


### முன்னுரை

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் வேகமாய் நிறைவேறி வருகின்றன.

### இயேசு கிறிஸ்து சீக்கிரம் வருகிறார்

உலகம் தோன்றியது முதல் இன்றுவரை எத்தனையோ பேரரசர்கள், அரசர்கள், ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகள், அரசியல் தலைவர்கள், மதத்தலைவர்கள் வாழ்ந்து மறைந்து போனார்கள். இவர்களில் யாரும் திரும்ப வருவேன் என்று சொன்னதுமில்லை, மற்றவர்கள் எதிர்பார்த்ததுமில்லை. ஆனால் இயேசு கிறிஸ்து ஒருவரே மறுபடியும் வருவேன் என்று சொல்லிப் போனார். கோடிக்கணக்கான கிறிஸ்தவர்கள் அன்றும் எதிர்பார்த்திருந்தனர். இன்றும் எதிர்பார்த்திருக்கின்றனர்.

இயேசுவைப் பின்பற்றின சீடர்கள் இயேசுவைப் பார்த்து:

இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்கு சொல்ல வேண்டும் என்றார்கள் (மத்.24:3).

தாம் மறுபடியும் இந்த உலகத்திற்கு வரப்போவதைப்பற்றி இயேசு சீடர்களுக்கு பலதடவை கூறியிருந்தார். எனவே சீடர்கள் அதை நன்கு அறிந்திருந்தனர். இந்த உலகத்திற்கு முடிவு உண்டு என்பதையும் அவர் கூறியிருந்தார்.

இயேசு கிறிஸ்துவின் வருகைக்கும், உலகத்தின் முடிவிற்கும் தொடர்பு உண்டு என்று அறிந்திருந்த அவர்கள் அது எப்போது நடைபெறும் அதற்கான அடையாளங்கள் என்ன? என்று கேட்டனர். அவர்கள் கேட்ட கேள்வி தவறு என்று இயேசு சொல்லவில்லை. அவர்களுக்கு மிக தெளிவான பதில் கொடுத்தார். எனவே அவர் திரும்ப வருவதும் உலகத்திற்கு முடிவு உண்டாவதும் நிச்சயம்.

### இயேசு கிறிஸ்துவின் வருகையை உறுதிப்படுத்தும் சாட்சிகள்

#### 1. இயேசு தாமே அதை உறுதிப்படுத்தினார்

உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்.

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன் (யோவான் 14:1-3).

அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது மனுஷகுமாரன் வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் வானத்தின்

மேகங்கள்மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள் (மத்தேயு 24:30).

உங்கள் ஆண்டவர் இன்னநாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள்.

நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார். ஆதலால், நீங்கள் ஆயத்தமாயிருங்கள் (மத்தேயு 24:42,44).

மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள் (மத்தேயு 25:13).

மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது, அவனவன் கிரியைக்குத் தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார் (மத்தேயு 16:27).

அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும், மகிமையோடும் மேகங்களின்மேல் வருகிறதைக் காண்பார்கள் (மாற்கு 13:26).

என்னைக் குறித்தும், என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ, அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தம்முடைய மகிமையோடும் பிதாவின் மகிமையோடும், பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார் (லூக்கா 9:26).

நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன் (யோவான் 14:18).

இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம் பற்றுகிறார்.

இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு. இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் என்றார். இதோ சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.

இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும் (வெளிப்படுத்தல் 1:8, 3:11, 22:7, 22:12, 22:20).

மேற்கூறிய வசனங்களில் இயேசு தாம் திரும்ப வரப்போவதைப்பற்றி திட்டமாகக் கூறியுள்ளார்.

## 2. தேவதூதர்கள் இயேசுவின் வருகையை உறுதிப்படுத்தினார்கள்

இயேசு கிறிஸ்து ஒலிவ மலையிலிருந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். சீஷர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது. அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில் இதோ வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் 2 பேர் அவர்களருகே நின்று, கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள் (அப்போஸ்தலர் 1:11).

## 3. அப்போஸ்தலர் இயேசுவின் வருகையை உறுதிப்படுத்தியுள்ளனர்

**பவுல்:** அப்போஸ்தலனாகிய பவுல் தன் நிருபங்களில் பல இடங்களில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மறுபடியும் வருவார் என்று தெளிவாக எழுதியுள்ளார்.

நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் (பிலிப்பியர் 3:20).

மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது (ரோமர் 8:19).

ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் (1தெச.4:16,17).

ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள் (1கொரிந்தியர் 11:26).

வருகிறவர் இன்னுங் கொஞ்சக்காலத்தில் வருவார், தாமதம்பண்ணார் (எபிரெயர் 10:37).

**யோவான்:** அப்போஸ்தலனாகிய யோவான் வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதினார். அதிலே மிகத் தெளிவாக இயேசுவின் வருகை உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது.

இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள், பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென் (வெளி. 1:7).

இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள் (1யோவான் 2:28).

**பேதுரு:** நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும், வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம் (2 பேதுரு 1:16).

கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம்; பூதங்கள் உருகிப்போம்; பூமியும் அதிலுள்ள கிரியைகளும் அழிந்துபோம் (2 பேதுரு 3:10).

**யாக்கோபு:** இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும், பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான் (யாக்கோபு 5:7).

**யூதா:** தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான் (யூதா 15).

மேற்கூறிய சாட்சிகள் யாவும் இயேசு கிறிஸ்துவின் வருகையை திட்டமும், தெளிவுமாக உறுதிப்படுத்துகின்றன.

– தொடரும்



# சாமுவேலின் இரண்டாம் புத்தகம்

## புத்தக அறிமுகம்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University

சவுல் மரித்த பின்பு (2சாமு.1:1) தாவீதின் வாழ்க்கையிலும் இஸ்ரவேலரின் சரித்திரத்திலும் என்ன நடந்தது என்ற விபரங்களை 2 சாமுவேல் புத்தகத்தில் காண்கிறோம்.

சாமுவேல் தீர்க்கதரிசியின் பிறப்பின் விபரத்துடன் ஆரம்பிக்கிற 1 சாமுவேல் புத்தகம், சவுல் ராஜாவின் எழுச்சியையும், வீழ்ச்சியையும், அவனுடைய அகாலமரணம் பற்றிய விபரத்தையும் நமக்குத் தருகிறது. சுமார் 100 ஆண்டுகால (கி.மு,1105-1010) நிகழ்வுகளை அப்புத்தகம் உள்ளடக்கியுள்ளது. அத்துடன், தேவனால் உயர்த்தப்பட்ட தாவீதின் எழுச்சி குறித்த ஆரம்ப விபரங்களும் அங்கு தரப்பட்டுள்ளன.

2சாமுவேல் புத்தகமோ, தாவீதின் வெற்றிகளையும், உயர்வுகளையும், பாவங்களையும், அரசாட்சி பற்றியுள்ள விபரங்களையும் தருகிறது. இப்புத்தகம் உள்ளடக்கும் விபரங்கள் சுமார் 40 ஆண்டு காலங்களாகும் (கி.மு. 1010-970).

2சாமுவேல் புத்தகத்திலுள்ள மொத்தமுள்ள 24 அதிகாரங்களையும் மூன்று தலைப்புகளாகப் பிரித்து விளங்கிக் கொள்ளலாம்:

1. தாவீதின் வெற்றிகளும், ஆசீர்வாதங்களும் (1:1-10:19). ஒன்று முதல் பத்துவரையுள்ள அதிகாரங்கள்.
2. தாவீதின் பாவமும், அதன் பின்விளைவுகளும் (11:1-20:26) பதினொன்று முதல் இருபதுவரையுள்ள அதிகாரங்கள்.
3. தாவீதின் அந்திய காலங்கள் (21:1-24:25) இருபத்தொன்று முதல் இருபத்து நாலுவரையுள்ள அதிகாரங்கள்.

### 1. தாவீதின் வெற்றிகளும் ஆசீர்வாதங்களும்:

சவுல் ராஜாவாக அரியணை ஏறினபின்பு, தனது ஆட்சி காலமெல்லாம் தாவீதைக் கொல்லும்படி துரத்திச் சென்றான். ஆனால் சவுல் மரணமடைந்தபோதோ, அதற்காக சந்தோஷமடைவதற்குப் பதிலாக, அவனுக்காகத் தாவீதுப் புலம்பல் பாட்டைப் பாடினான்! இது, தாவீதின் தாழ்மையையும், மனஉருக்கத்தையும், உயரிய பண்பையும் நமக்குக் காட்டுகிறது. தனது பிராண சிநேகிதனாகிய யோனத்தானுக்காகவும் புலம்பிப்பாடும் தாவீதின் புலம்பல் உள்ளத்தை உருகச் செய்கிறது.

### எபிரோனில் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்படுதல்:

யூதாவின் மூப்பர் தாவீதைத் தேடிவந்து அவனை யூதாவின் மேல் ராஜாவாக்கினர். இங்கு 7 1/2 ஆண்டுகள் அரியணையில் அமர்ந்து தாவீது ஆட்சி செய்தான்.

### இஸ்ரவேலரின் மூப்பரால் அபிஷேகம் பண்ணப்படுதல்:

அதன்பின்பு, இஸ்ரவேலரின் மூப்பர் எபிரோனுக்கு வந்து, தாவீதை சமஸ்த இஸ்ரவேலின் மேலும் ராஜாவாக அபிஷேகம் செய்தனர் (2சாமு.2:4).

இக்காலத்தில்தான் எபூசியரின் பட்டணமாயிருந்த எருசலேமைத் தாவீது வென்றெடுத்து, அதற்கு "**சீயோன்**" என்றும் "**தாவீதின் நகரம்**" என்றும் பெயரிட்டான். எருசலேமைத் தனது தலை நகரமாக்கித்தான் அரியணையிலிருந்த தன் காலமெல்லாம் ஆட்சிசெய்தான். எபிரோனிலிருந்து யூதாவின்மேல் ஆண்டகாலமும், எருசலேமிலிருந்து சமஸ்த இஸ்ரவேலின் மேலும் ஆண்ட காலங்கள் மொத்தம் 40 ஆண்டு காலங்களாகும். தேவனையே சார்ந்திருந்து, அவர் கொடுத்த ஞானத்தைக் கொண்டும், அபிஷேகத்தைக் கொண்டும் வெற்றிகள் பல குவித்தான்.

எபூசியரின்மேல் வெற்றிகண்ட தாவீது, கர்த்தருடையப் பெட்டியை எருசலேமுக்குக் கொண்டுவந்து, அதை **மார்க்கத் தலைநகராகவும்** மாற்றினான். தேவனையே தன் ராஜாவாகக் கொண்டு தாவீது செயல்பட்டபடியால், பெலிஸ்தர் தொடங்கி மற்றெல்லா எதிரிகளையும் மடங்கடித்தான். பலவான்களாகிய வீரரெல்லாம் தாவீதின் பக்கம் வந்து சேர்ந்தனர். எருசலேமில் கர்த்தருடைய பெட்டி என்றென்றும் இருக்கவும், தேவன் தமது பிரசன்னத்தால் ஆளுகை செய்யவும் வேண்டுமென எண்ணம் கொண்ட தாவீது கர்த்தருக்கு ஒரு ஆலயம் கட்டவும் விண்ணப்பம் பண்ணினான். ஆனால் தேவனோ அதற்குத் தட்டுதல்பண்ணி, அவனுக்கும் அவனது சந்ததிக்கும் ஒருவீட்டைக் கட்டித்தருவேன் என்றுவாக்கு அருளினார். இந்த விபரங்களை 2சாமுவேல் 7-ம் அதிகாரத்தில் பார்க்கிறோம்.

அதுமட்டுமல்லாது, தாவீதின் சந்ததியிலிருந்து இஸ்ரவேலை ஆளப்போகும் உலக இரட்சகரும், ராஜாதி ராஜாவுமாகிய இயேசுகிறிஸ்து தோன்றுவார் என்பதையும் தேவன் அறிவித்தான், மேசியாவாகிய அந்த ராஜா முழு உலகத்துக்கும் மையமான நித்திய ராஜ்யத்தை எருசலேமைத் தலைமையிடமாகக் கொண்டு ஸ்தாபிப்பார் என்ற மிக நீண்டதூர காலச்சரித்திர நிறைவேறுதலின் வாக்குத்தத்தையும் தாவீதுக்கு அன்று அறிவித்தார்.

### 2. தாவீதின் பாவமும் வீழ்ச்சியும்:

2சாமுவேல் 11ம் அதிகாரம் தாவீதின் சரித்திரத்தின் **இருண்ட அத்தியாயம்** என வருணிக்கப்படலாம். யுத்தத்துக்கு செல்லவேண்டிய காலத்தில், தனதுவீட்டில் பின்தங்கிவிட்ட தாவீது, உப்பரிகையின்மேல் உலாத்திக்கொண்டிருந்தபோது, தன்னுடைய போர்வீரன் உரியாவின் மனைவி பத்சேபாள் குளித்துக் கொண்டிருந்தபோது அவளைக் கண்டு, விதிமீறல் செய்து, அவளுடன் பாவம் செய்தான். யுத்தத்தில் இருந்த அவளுடைய கணவன் உரியாவையும் சூழ்ச்சி செய்துக் கொன்றான்.

### இவை கர்த்தருடைய பார்வையில் மிகப்பெரிய பாவமாயிற்று

தாவீதின் பாவத்தைத் தீர்க்கதரிசியாகிய நாத்தான் சுட்டிக்காட்டி எச்சரித்தபோது, தாவீது மனமுடைந்து அழுது, புலம்பல்பாடி, பாவஅறிக்கை செய்தான் (சங்.51). கர்த்தர் அவனது பாவங்களை மன்னித்தார். ஆனாலும், அவன் செய்த பாவங்களின் பின்விளைவுகளை அனுபவிக்க வேண்டியதாயிருந்தது.

அவை அவனுடைய குடும்பத்தையும் (அதி.12-17), இஸ்ரவேல் தேசம் முழுவதையுமே (அதி.18-20) பாதித்தது.

- தாவீதின் குமாரனாகிய **அம்னோன்** தனது ஒன்றுவிட்ட சகோதரி "தாமாரை பாலியல் பலாத்காரம் செய்தான். தாமாரின் உடன்பிறந்த சகோதரனாகிய "**அப்சலோம்**" அம்னோனைக் கொலை செய்தான்.

- அப்சலோம் தன் தகப்பன் தாவீதுக்கு எதிராக ராஜதுரோகம் செய்தான். சவுலுக்குப் பயந்து சுமார் 18 ஆண்டு காலங்கள் வனாந்திரத்தில் ஓடிஒளிந்த தாவீது (சங்.56:8), இப்போதோ, தனதுச் சொந்தக் குமாரனுக்குப் பயந்து சிம்மாசனத்தைவிட்டு எழுந்து, காட்டுக்குள் ஓடிஒளிந்து கொண்டான். எனினும் அப்சலோம் கொல்லப்பட்டபோது, தாவீது எருசலேமுக்குத் திரும்பி வந்தான். அப்சலோமின் மரணத்துக்காகவும் புலம்பி அழுதான். இதுவும் தாவீதின் சிறந்த பண்பன்றோ!.

### 3. தாவீதின் கடைசி காலங்கள்:

தன் வாழ்க்கையில் தான் செய்துவிட்ட கொடியப் பாவத்துக்குப்பின், தாவீது தனது சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தாலும், மிகவும் மனம் உடைந்துபோய், பாவத்தின் பின்விளைவுகளின் காயங்களால் நொந்துபோய் இருப்பதைப் பார்க்கிறோம். சங்கீதப் புத்தகத்திலுள்ள 150 சங்கீதங்களில் 73 சங்கீதங்களைத் தாவீது பாடியுள்ளான். அவற்றை “துதியின் சங்கீதங்கள்”; “புலம்பலின் சங்கீதங்கள்”; “நன்றிசெலுத்தும் சங்கீதங்கள்” என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

அவன் பாடிய புலம்பலின் **சங்கீதங்கள் மொத்தம்** 34.(சங்.3-7,12-14,17, 25,31,33,38,41,51,56-59,70,74,79,80,82,83,85,94,109,122,124,131,141, 143).

இவற்றில் பெரும்பாலானவைகள் அவன் வனாந்திரத்திலும், காடுகளிலும் ஓடிஒளிந்தக் காலங்களில் பாடப்பட்டவையாகும்.

தாவீதின் வாழ்க்கைச் சரித்திரத்தை **1 சாமுவேல் 16:1 முதல் 1 இராஜாக்கள் 2:11 வரை** வேதாகமம் நமக்குத் தருகிறது. அவற்றிலிருந்து, தாவீதை ஐந்து நிலைகளில் காணலாம்:

- பெத்லெகேம் தாவீது
- அரண்மனைத் தாவீது
- வனாந்திர தாவீது
- எபிரோன் தாவீது
- எருசலேம் தாவீது

**1 சாமுவேல் 16ம் அதிகாரம் முதல், 2சாமுவேல் பத்து வரையுள்ள பகுதிகளில்,** மேலே குறிப்பிட்டுள்ள தாவீதின் முதலாவது நான்கு நிலைகளைக் காண்கிறோம். ஆனால் **எருசலேமின் தாவீதோ,** இருண்ட அத்தியாயமாகிய **2 சாமுவேல் 11-க்குப்பிறகு,** பாவத்தின் காயங்களால் நொந்துபோய் சத்துவமற்று இருப்பதையே காண்கிறோம். தாவீதின் வீரர்கள் இப்பகுதியில் பிரதானப்படுத்தப்படு கின்றனர். தாவீது தனது வீரர்களை சார்ந்திருக்கும் காலத்துக்குத் தள்ளப்பட்டு விட்டானோ எனவும் எண்ணத் தோன்றுகிறது. எனினும் ஆண்டவரே தாவீதைக் குறித்து, **ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்** (அப்.13:22) என்ற வசனம் அவ்விதம் அறுதியிட்டுச் சொல்ல நம்மை அனுமதிக்கவில்லை என்றே கூறலாம்!

2 சாமுவேல் கடைசி அதிகாரத்தில் (அதி.24) தேவனுக்குக் கோபமூட்டும்படி, தாவீது சாத்தானால் ஏவப்பட்டுத் தனது பெருமையினால் ஜனங்களைத் தொகையிட்டான். எருசலேம் பட்டணம் வரை சங்காரத்தூதன் வந்தபோது, அது அழிந்துபோகாதபடி தேவன் சங்காரத் தூதனைத் தடுத்தார்.

வாதை நிறுத்தப்படும்படி தாவீது கர்த்தருக்கு ஒருபலிபீடம் கட்டி பலி செலுத்தினான். அதற்கென **அவர்னாவின் களத்தை** கிரயம் செலுத்தி வாங்கினான். இந்த நிலமே முன்பு ஆபிரகாம் ஈசாக்கை பலியாகச் செலுத்த பலிபீடம் கட்டிய இடம்; பிற்பாடு இங்குதான் சாலமோன் எருசலேமில் தேவாலயத்தையும் கட்டினான்.

பத்சேபாளுடன் செய்த பாவம் மாம்ச இச்சையினால் வந்தது. தண்டனையாக அவளுக்குப் பிறந்த பிள்ளை செத்தது. பாவப்பரிகாரமாக, பாவஅறிக்கைப் புலம்பல் பாடலாக 51வது சங்கீதத்தை தாவீது பாடுகிறான்.

ஜனங்களைத் தொகையிட்ட பாவம் பெருமையினால் வந்தது. தேவத்தண்டனையாக ஜனத்தின்மேல் வாதை வந்தது; 70,000பேர் செத்துப்போயினர். பாவ அறிக்கைசெய்து மீண்டுவந்த தாவீது, பாவப்பரிகாரம் செய்ய பலிபீடம்கட்ட கிரயமாய் வாங்கிய இடம் சரித்திரம் முக்கியத்துவம் வாய்ந்த, தீர்க்கதரிசன உந்துதலால் வாங்கப்பட்டது. எனவே, தாவீது இன்னும் தேவனோடுதான் இருந்தான் என்பதை உறுதிப்பட கூறிவிட முடியும்.

**முத்தாய்ப்பான முடிவுரை:**

தாவீதின் அரியணையும், பாவத்தின் பின்விளைவுகளைச் சுமக்க ஓடி அலைவதும், யுத்தங்களும், சண்டைகளும், சூழ்ச்சிகளும், வெற்றிகளும், தோல்விகளும் என 2 சாமுவேலின் புத்தகம் அமைந்திருப்பினும், இப்புத்தகம் மிகநேர்த்தியாய் வடிவமைக்கப்பட்டுள்ளது. சம்பவத் தொடர்கள் தொடர்ச்சியாய்த் தரப்படாவிடினும், இலக்கிய வடிவமைப்பு மிகநேர்த்தியாக அமைந்துள்ளது.

- சவுலின் தோல்விகள், தாவீதின் வெற்றிகளாய்ப் பாராட்டப்படுகின்றன.
- முதல் 10 அதிகாரங்களில் சிறந்தப் போர் வீரனாய் போற்றப்படும் தாவீது, தனது வீழ்ச்சிக்குப்பிறகு எழுந்து வரவில்லையோ என்ற சந்தேகமும் எழுகிறது.
- அவனது ஆபத்துக் காலத்தில் தேவன் கிருபையாய் அவனைக் காப்பாற்றுவதையும், அவனுடன் செய்த உடன்படிக்கையைக் காத்தார் என்பதையும் காண்கிறோம்.
- தாவீதின் பாவத்தினால், **மேசியா ராஜா அவன் சந்ததியிலிருந்துத் தோன்றுவார்** என்னும் தமது வாக்குத்தத்ததை தேவன் மாற்றவில்லை என்றும் பார்க்கிறோம்.
- சவுலும், தாவீதும் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட தலைவர்களே; எனினும் அவர்களது பாவமும் வீழ்ச்சியும் **தேவனுடைய மீட்பின் திட்டத்தை** மாற்றிவிடவில்லை.
- சவுலின் பெருமையையும், தாவீதின் மதியீனத்தையும் தேவன் எதிர்த்தாலும், தாவீது தன்னைத் தாழ்த்தியபோது, அவனை தேவன் உயர்த்தினார்.

எனவே இப்புத்தகம் தரும் நீண்ட எதிர்கால நம்பிக்கை தாவீதுடன் நின்றுவிடவில்லை; மேசியாவாகிய ராஜா வந்து, தமது ராஜ்யத்தை எருசலேமைத் தலைமையிடமாகக் கொண்டு ஸ்தாபித்து, உலகநாடுகள் அனைத்துக்கும் ஆசீர்வாதமாய் ஏற்படுத்துவார் என்ற உண்மையையும் 2சாமுவேல் புத்தகம் நமக்குச் சொல்லுகிறது.

அந்த தேவனையே நம்புவோம், அவரை சார்ந்திருந்து அவரது உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாய் வாழுவோம்.

ASSEMBLIES OF GOD

# தமிழ் பிரதேச AG சிறுவர் ஊழியம்

AGCM



# BIBLE CHAMPIONS






PRIZE 1


PRIZE 2

**20 NOV**

**@ 3 pm**

Last Day of Registration

**25.10.2022**

PORTIONS

| Group | Age | Portion | Marks |
|---|---|---|---|
| Group A | upto 6 Yrs | Acts 1–14 | 30 Marks (Drawing – 10 \| Coloring – 10 \| Q+A – 10 oral) |
| Group B | 7 – 9 Yrs | Acts 1 – 14 | 60 Marks (Choose – 50 \| Short Answers – 10) |
| Group C | 10 – 13 Yrs | Acts 1 – 28 | 100 Marks (Choose – 90 \| Short Answers – 10) |
| Group D | 14 – 17 Yrs | Acts 1 – 28 | 100 Marks (Choose – 90 \| Short Answers – 10) |
| Group E | Sunday School Teachers | Acts 1 – 28 | 100 Marks (Choose – 100) |

## For More Information

**REV. BEGIN SAMUEL**
9944 952388

**REV. DANIEL RATHNARAJ**
9952 530380

**REV. MELVIN MANESH**
98437 22281

**REV. EBENEZER**
98846 99087

**REV. S.P. RAJA SELVAM**
97867 65100

- பதிவு கட்டணம் அனைத்து பிரிவிற்கும் Rs.25/– மட்டும்
- ஆங்கிலத்தில் படிப்பவர்கள் NKJV மொழிபெயர்ப்பை பயன்படுத்தவும்
- பிரதேச அளவில் ஒவ்வொரு பிரிவிலும் 2 பரிசுகள் + கேடயம் (1st Prize Keyboard + 2nd Prize Guitar)
- மண்டல அளவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் பரிசு
- அதிகமான பிள்ளைகள் பதிவு செய்யும் சபை போதகருக்கு பரிசு
- அதிகமான பிள்ளைகள் பதிவு செய்யும் மண்டலம் Presbyter + AGCM பொறுப்பாளர்களுக்கு பரிசு உண்டு

*Rules & Hints*

email: **agcmtn@gmail.com** web: **www.agcmtamilnadu.com**



# தேடிவந்த மகிமை


**Dr. ராணி ஜெயச்சந்திரன்**

நிர்வாகக்குழு உறுப்பினர், தமிழ் பிரதேசப் பெண்கள் ஊழியம்


ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துகொள்கிறேன்.

**''அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்''** (எசேக்கியேல் 11:20). இந்த வாக்குத்தத்தத்தை எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு ஆண்டவர் எப்பொழுது கொடுத்தார் என்றால் சிறைப்பட்டு பாபிலோன் தேசத்தில் கைதிகளாய் இருக்கும்போது கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தம். **ஏன் சிறைப்பட்டுப் போனார்கள் என்றால் தேவனுக்கு கீழ்ப்படியாமல் ஆண்டவரை விட்டு பாகாலையும் நரகலான விக்கிரகங்களையும் சேவித்தபடியால் கர்த்தர் அவர்களை பாபிலோன் இராஜாவின் கையில் ஒப்புக்கொடுத்தார்** என 2 நாளாகமம் 36:6-ல் வசனம் இப்படி சொல்கிறது.கடைசியாக யோயாக்கின் ராஜா இருக்கும்பொழுது பாபிலோன் ராஜா சிறைபிடித்து கொண்டு போனான். இதுதான் முதலாவது முறை படை எடுத்து வந்து சிறை பிடித்த அனுபவம். இந்த முதலாம் சிறைபிடிப்பில் எசேக்கியேலும் சிறைபிடிக்கப்பட்டு பாபிலோன் தேசத்திற்கு போய்விட்டான். பாபிலோன் தேசத்தில் கர்த்தர் எசேக்கியேலுக்கு நிறைய தரிசனங்களை கொடுத்தார்.

இந்த வாக்குத்தத்தத்தில் ஆண்டவர் சொல்லியிருக்கிறார். அவர்கள் என் ஜனமாய் இருப்பார்கள். என் ஜனங்கள் என்று தேவன் சொன்னாரே. அந்த இஸ்ரவேல் ஜனங்கள் எப்படிப்பட்டவர்களாய் இருந்தார்கள் என்பதையும் எசேக்கியேலுக்கு ஆண்டவர் காட்டுகிறார். எசேக்கியேல் 2:5 சொல்கிறது **அவர்கள் கலக வீட்டார். கலகம்தான் பண்ணுவார்கள்**. ஆனாலும் அவர்கள் என் ஜனமாய் இருப்பார்கள். எசேக்கியேல் 3:7-ல் **இஸ்ரவேல் வீட்டாரோவெனில் உனக்கு செவி கொடுக்க மாட்டார்கள். எனக்கே செவி கொடுக்க மாட்டோம் என்கிறார்களே** என்று ஆண்டவர் சொல்கிறார். எசேக்கியேல் 8:1-ல் எசேக்கியேல் தன் வீட்டில் மூப்பர்களோடு இருக்கும்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் ஒருகை போல் தோன்றினதை நீட்டி எசேக்கியேலை தூக்கி எடுத்து எருசலேமில் கொண்டுபோய் வைக்கிறார். அந்த எருசலேம் தரிசனத்தை பார்க்கும்பொழுது என்ன நடக்கிறது என்றால் எசேக்கியேல் 8:5-ல் வசனம் மனுபுத்திரனே வடக்கே உன் கண்களை ஏறெடுத்துப்பார் என்றார். ஏறெடுத்து பார்க்கும்பொழுது பலிபீடத்தின் வாசலுக்கு வடக்கே பார்த்தேன், நடையிலே எரிச்சல் உண்டாக்குகிற விக்கிரகம் இருந்தது. மட்டுமல்ல **9-ம் வசனத்தில் சுற்றில் நகரும் பிராணிகளையும், அருவருப்பான மிருகங்களின் சுரூபங்களையும் வரைந்து வைத்திருந்தார்கள். அதற்கு முன்பாக இஸ்ரேல் வம்சத்தில் மூப்பர்கள் 70 பேரும் தூப கலசங்களை பிடித்துக்கொண்டு அதற்கு முன்பாக நிற்கிறார்கள்.** மிக கேவலமான முறையில் ஆண்டவரை ஒதுக்கி தள்ளிவிட்டு விக்கிரகங்களுக்கும், நரகலான விக்கிரகங்களுக்கும், தூபகலசங் களையும் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். மட்டுமல்ல எசே.8:13-ல் வசனத்தில் இன்னும் அவர்கள் செய்கிற அதிக அருவருப்புகளை இன்னமும் காண்பாய் என்று சொல்லி அவர் என்னை வடக்கு வாசலில் நடையிலே கொண்டு போனார்கள். **இதோ தம்மூசுக்காக அழுது கொண்டிருக்கிற ஸ்திரீகள் உட்கார்ந்திருந்தார்கள்.** தம்மூஸ் என்பது கற்பனையாக உருவாக்கப்பட்ட ஒரு தெய்வம். எதற்காக தம்மூசுக்காக

அழுகிறார்கள் என்றால், அந்த தம்மூசின் கதை என்னவென்றால் அந்த தம்மூஸ் இலையுதிர் காலத்தில் இறந்து போயிருக்கும். அதற்காக புறஜாதியான ஸ்திரீகள் அழுவார்கள். ஆனால் இங்கே இஸ்ரவேல் ஸ்திரீகளும் அழுகிறார்கள். ஆனால் இலையுதிர் காலம் முடிந்து வசந்த காலம் வரும்பொழுது அவர்கள் அதை ஒரு விழாவாக கொண்டாடுகிறார்கள். இந்த விழா கொண்டாடப்படும்பொழுது அவ்வளவு அவலட்சணமாக வேசித்தனம் மேலோங்கி நிற்கும். ஸ்திரீகள் அவ்வளவு அவலட்சணமாக காரியத்தை செய்வார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட ஜனங்கள் அவ்வளவு தூரம் வழி நடத்தி வந்த எல்லா நன்மைகளையும் மறந்து தம்மூசுக்காக அழுது கொண்டிருக்கிறார்கள். அவர்களை கர்த்தர் காண்பித்தார். அது மட்டுமல்ல எசேக்கியேல் 8:16-ல் என்னை **கர்த்தருடைய ஆலயத்தின் வாசல் நடையிலே மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே 25 புருஷர் தங்கள் முதுகை கர்த்தருடைய ஆலயத்துக்கும் தங்கள் முகத்தை கீழ் திசைக்கும் நேராக திருப்பினவர்களாய் கீழே இருக்கும் சூரியனை நமஸ்கரித்தார்கள்.**

மேலும் எசேக்கியேல் 10:4-ல் **கர்த்தருடைய மகிமை கேருபீனின் மேலிருந்து எழும்பி ஆலயத்தின் வாசற்படியிலே வந்தது.** கர்த்தருடைய மகிமை எங்கே இருக்கும் என்றால் ஆலயத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கும். ஆனால் ஜனங்கள் தேவாலயத்தை அசுத்தமாக்கி எரிச்சல் ஊட்டும் விக்கிரகத்தை வைத்தபடியினால் கர்த்தருடைய மகிமை மேல எழும்பி ஆலயத்தின் வாசற்படியில் இருந்தது என்று பார்க்கிறோம். எசேக்கியேல் 11:23-ல் **கர்த்தருடைய மகிமை நகரத்தின் நடுவில் இருந்து எழும்பி நகரத்துக்கு கிழக்கே இருக்கிற மலையின்மேல் போய்நின்றது.** ஜனங்கள் அவரை ஒதுக்கி வைத்துவிட்டு புறஜாதியாரோடு ஆவலோடு அசுத்தமான காரியங்களை செய்தார்கள். ஆனாலும் தேவனுடைய இரக்கம், அவருடைய மகிமை ஆலயத்தை விட்டு வெளியேவந்து கிழக்கே ஒரு மலையில் நிற்கிறது. அதன்பிறகு அந்த மகிமை என்ன ஆயிற்று என்று எசேக்கியேலுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால் அந்த மகிமை ஜனங்கள் மனம் திரும்ப மாட்டார்களா? என்னை ஏற்றுக்கொள்ளமாட்டார்களா? என்று அவர்களுக்காக காத்துக்கொண்டு இருக்கிறது. மனம் திரும்ப தருணங்களை கொடுக்கிறார். தீர்க்கதரிசிகளை எழுப்புகிறார். ஆனாலும் கேட்கவில்லை. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் மகிமை எருசலேமை விட்டு விலகிப்போயிற்று. 2 நாளாகமம் 36-ம் அதிகாரத்தில் சிதேக்கியா ராஜாவின் காலத்தில் எருசலேமில் பாபிலோன் ராஜா எல்லாவற்றையும் சுட்டெரித்து போடுகிறான். எருசலேம் மண்மேடாய் காணப்பட்டது. இஸ்ரவேல் தேசத்தின் சரித்திரமே முடிந்துவிட்டது போன்ற ஒரு காட்சி. ஆனால் அழைத்த தேவன் எந்த நோக்கத்திற்காக நம்மைப் படைத்தாரோ, தேவன் ஒருபோதும் திட்டத்தை மாற்றமாட்டார். மண்மேடாய் போனாலும் மகிமை எருசலேமை விட்டுப்போனாலும் எல்லாமே ஒன்றுமில்லை என்று இருக்கும்போது எசேக்கியேல் 1:1-ல் காண்கிறோம். அந்த மகிமை பாபிலோன் தேசத்தில் வெளிப்பட்டது. கர்த்தர் வானங்களை திறந்தார். அநேக தரிசனங்களை காண்பித்தார். ஏனெனில் அவர் இரக்கமுள்ள தேவன். தேடி வந்த தேவன். ஜனங்கள் அவரை ஒதுக்கினாலும் அவர் தேடி வருவார்.

எபேசியர்:5:2,4,5-ம் வசனங்களில் தேவனோ இரக்கமுள்ளவர். ஐஸ்வர்யமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே பாவத்தினாலும் அக்கிரமத்தினாலும் மரித்தவர்களாக இருந்த நம்மை கிறிஸ்துவோடு கூட உயிர்ப்பித்தார் என்று காண்கிறோம். நம்முடைய தேவன் மிகுந்த இரக்கமுள்ளவர், அன்புள்ளவர். தூரம் போனாலும் **அந்த மகிமை விண்ணிலிருந்து மண்ணுக்கு நம்மை தேடி வந்தது. நமக்காக ஜீவனை கொடுத்தது. இன்றைக்கும் நமக்குள்ளாக வாசம் செய்கிறது.**

தொடரும்



# புதிய மாற்றங்களைப் பயன்படுத்துவோம்


**Rev. J. தேவதாசன் கலையரசன்**

Senior Pastor, Bethel AG Church, Kolathur


உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும், சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் (மாற்கு 16:15) என்கின்ற இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளைக்கு கீழ்படிந்த சீஷர்கள், புறப்பட்டுச் சென்றார்கள்(16:20). அதன் பலனாக அருட்பணியின் யுகம் ஆரம்பித்தது. ஐந்து கண்டங்களிலும் சுவிசேஷம் பரம்பியுள்ளது. அந்தந்த தேசங்களுக்குகேற்ற அணுகுமுறையுடன்; சுவிசேஷம் தேசங்களில் ஊடுருவியுள்ளது. அது உள்ளே நுழையும் விதமும், பரவின விதமும் **படிப்படியான வளர்ச்சியைக்** கொண்டிருந்தது.

இந்தியாவைப் பொருத்தமட்டில் தோமா காலத்திலே (கி.பி.52) சுவிசேஷம் நுழைந்துவிட்டது. 15ம் நூற்றாண்டில்தான் கத்தோலிக்க மிஷனரிகள் அதிகளவில் வந்திருக்கிறார்கள். புராட்டஸ்டன்ட் இயக்கத்தைப் பொருத்தமட்டில் வில்லியம்கேரி முதல் மிஷனரியாக கருதப்படுகிறார் (1793-1834).

புராட்டஸ்டன்ட் மிஷனரிகள் பெரும்பாலும் கடற்கரை மார்க்கமாக வந்து கடற்கரையோரமே தங்கள் பணித்தளத்தை நிறுவினார்கள்□(Coast Lands Mission-1972)□. சீன மிஷனரியான ஜேம்ஸ் ஹட்சன் டெய்லர் (1832-1905) சீனாவில் பிரபல்யப்படுத்திய **உள்நாட்டு மிஷன்** (inland Mission) இந்தியாவிலும் வலுப்பட்டு அநேக மிஷனரிகள் தேசத்தின் உட்பகுதியிலும் ஊடுருவினார்கள். 1934-35 முதல் இன்றுவரை நமது இந்தியாவில் மிஷன் ஊழியத்தில் அடுத்தகட்ட பரிணாமமாக **மக்கள் குழுவைச்** (People Group) சந்திக்கும் ஊழியம் ஏற்படுத்தப்பட்டு இன்று பிரபல்யமாகி வருகிறது. நூற்றாண்டுதோறும் ஏற்பட்ட மாறுதல்கள் போய் இப்போது **அடிக்கடி மாற்றங்கள்** ஏற்படும் காலங்களில் இருக்கிறோம். எனவே மிஷன் உலகத்தில் இன்று ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், வாய்ப்புகளையும் மிஷன் ஆர்வமுள்ள அனைத்து சபைகளும் அறிந்து கொள்ள வேண்டும்.

## I. சமீப காலத்து அருட்பணியின் வளர்ச்சியும், வாய்ப்புகளும்

வெளிநாடுகளிலிருந்து வந்த மிஷனரிகளின் காலம் ஏறக்குறைய முடிந்துவிட்டது எனலாம். நம் நாட்டு சபைகளிலிருந்தே மிஷனரிகள் உருவாக்கபட்டு வடஇந்தியாவிற்கும், அண்டை மாநிலங்களுக்கும் ஏன் சில வெளிநாடுகளுக்கும் மிஷனரிகளாக அனுப்பப்படும் முன்னேற்றமான சூழ்நிலை நம் நாட்டில் ஏற்பட்டுள்ளது.

நீங்கள் **மிஷனரியாக** புறப்பட்டுப் போக வேண்டும் அல்லது நீங்கள் **பதிலாளை** (Substitute) அனுப்ப வேண்டும் என்ற சுலோகத்தை ஏற்படுத்தி அதைப் பிரபல்யப்படுத்தியவர் ஆஸ்வால்ட்ஸ்மித். இந்தியாவிலும் **போ அல்லது அனுப்பு** என்கின்ற கோஷத்தினால் தென்இந்திய மிஷனரிகள் ஏராளமானோர் வடஇந்தியாவில் இன்று அருட்பணியாற்றி வருகின்றனர்.

AG ஸ்தாபனத்தைப் பொருத்தமட்டில் வீடுகள்தோறும் சுவிசேஷம் அறிவித்து, **ஆராதனைக் குழுக்கள்** ஏற்படுத்துவதோடு நிறுத்திவிடாமல் **சபை நிறுவும் பணி** முக்கியப்படுத்தப்படுகிறது. 600க்கும் அதிகமான மிஷனரிகள்

அனுப்பப்பட்டிருக்கிறார்கள் அல்லது தாங்கப்படுகிறார்கள் என்றால் அதன் பொருள் 600க்கும் அதிகமான **புதிய சபைகள்** ஸ்தாபிக்கப்படுகின்றது என்பதே.

மேலும் கிராமங்களை மட்டுமல்லாது, **நகரங்கள் மீதும்** தீவிர கவனம் செலுத்தப்பட்டிருப்பதால், குறுகிய காலங்களில் AGமிஷன் ஊழியங்கள் பெரிதும் வளர்ந்து இருக்கின்றன. பவுலின் நகரஅணுகுமுறை (Urban Apporach) பின்பற்றப்படுவதால் தமிழ்நாட்டைப் போல வளர்ந்த தன்னிறைவு பெற்ற பெரிய சபைகள் வடஇந்தியாவில் பெருகி வருகின்றன.

## II. சமீப காலத்து மிஷன் உலக சிக்கல்கள்

வடஇந்தியாவில் நீண்டகாலம் அருட்பணியாற்றி வரும் ஒரு அனுபவமுள்ள போதகர், தென்னிந்தியாவில் இருந்து வடஇந்தியாவிற்கு மிஷனரிகளாக வருவோர் எண்ணிக்கை வெகுவாக குறைந்து வருகிறது என்றும். அங்கு புதிதாக எழும்பி வரும் மற்றொரு பிரச்சனை, தென்னிந்திய மிஷனரிகளுக்கும், உள்ளூர் மிஷனரி களுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் இடைவெளி அதிகரித்து வருவதாக கூறுகிறார்.

எனவே மிஷன் அக்கறையுள்ள சபைகள் முந்தின பழைய முறைகளோடு, தற்போது ஏற்பட்டு வரும் புதிய சூழ்நிலைகளை சாதகமாக பயன்படுத்தும் புதிய யுக்திகளை வகுப்பது அவசியம்.

## III. இன்றுவரை தமிழ்நாட்டு சபைகள் ஈடுபட்டு வருகின்ற அருட்பணிகள்

1. தாங்கள் சுவீகரித்துள்ள ஒரு வடஇந்திய மாநிலத்திற்காக வரைபடத்துடன் ஜெபிப்பது.
2. பொருளுதவியினால் மிஷன் பணியைத் தாங்கி வருவது.
3. குறுகியகால மிஷன் டிரிப் போய் தமிழ்நாட்டு பாணி ஊழியம் செய்து வருவது.
4. தங்கள் சபையிலிருந்து ஒரு சில மிஷனரிகளை உருவாக்கி அனுப்புவது.

## IV. நாம் செய்ய வேண்டியது

1. வரும் காலங்களில், வட இந்தியா செல்ல முன்வரும் மிஷனரிகள் குறைந்தால் அடுத்து என்ன மாற்றம் கொண்டுவரலாம் என இப்போதே சபைகள் திட்டமிடுவது நல்லது.
2. இங்கு இருந்து அனுப்பப்படும் மிஷனரிகள் எண்ணிக்கை குறைந்து வந்தபோதும் அங்கு சுதேச மிஷனரிகள் அதிகளவில் எழும்பி வரும் நல்ல சூழல் ஏற்பட்டுள்ளது. சபைகள் இந்த நல்ல மாற்றத்தை ஊக்குவிக்க, வட இந்திய வேதாகம கல்லூரியில் மிஷனெரி மாணவர்கள் சேரும் காலத்திலேயே, அவர்கள் கல்விக்கு உதவி செய்ய திட்டமிடலாம்.
3. இங்கிருந்து அனுப்பப்படும் தமிழக மிஷனரிகள் மட்டுமல்லாது வடஇந்திய மிஷனரிகளால் புதிதாக ஆரம்பிக்கப்படும் சபைகளுக்குத் தேவையான பொருளாதார உதவி செய்யவும் முன்வந்தால், அங்குள்ள சபைகளின் எண்ணிக்கை விரைவில் இரண்டு மடங்காகும்.

## V. மாற்றம் ஒன்றே மாறாதது

மிஷன் உலகத்தில் சமீபத்தில், வேறு சில புதிய மாற்றங்களும் நடைபெற்றிருக்கிறது.

1. எந்த ஒரு வடஇந்தியரைச் சந்திப்பது கடினம் என்று இது வரை தயங்கினோமோ அவர்கள் கூட்டம் கூட்டமாக, நமது வீட்டருகில் இன்று வசிக்கின்றனர்.

2. அறியாமையினாலும், கிறிஸ்தவ எதிர்ப்பு சிந்தனையினாலும் நிரப்பப்பட்டிருந்த வட இந்தியச் சகோதரர்கள், இப்போது நம் இருப்பிடம் வந்து நாங்களும் **இயேசுவைப் பார்க்க விரும்புகிறோம்** என்கிறார்கள்.

3. இந்த அரிய சந்தர்ப்பத்தை நமது சபைகள் பயன்படுத்திக் கொள்ள அறிந்தால், ஏறக்குறைய அனைத்து சபைகளிலுமே ஹிந்தி ஆராதனைகள் துவங்கும் வாய்ப்புண்டாகும்.

4. சென்னையில் உள்ள அநேக சிறிய சபைகளில் கூட ஏற்கனவே ஹிந்தி ஆராதனை, ஆரம்பித்து விட்டார்கள். மொழி தெரியாத போதிலும் மொழி பெயர்ப்பு உதவியினால் இதைச் செய்து வருகிறார்கள்.

5. சென்னையில் மட்டுமல்ல தமிழகமெங்கும் வடஇந்தியர்கள் கடல்மணலளவாய் பெருகி வருகிறார்கள். இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினால், குறுகிய காலத்தில் அவர்கள் இயேசுவை அறிவார்கள். அவர்களில் சிலருக்கு பயிற்சி கொடுத்து திருப்பி சென்று வடஇந்தியாவில் ஊழியம் செய்தால் மாபெரும் எழுப்புதல் உண்டாகும்.

## இறுதியாக

அரசியல்வாதிகள் புலம் பெயர்ந்தோரை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள். கடந்த சில வருடங்களாக நமக்கு முன் இருந்து வரும் இந்த நல்ல வாய்ப்பை எப்போது பயன்படுத்தப் போகிறோம்? இப்போதெல்லாம் மாற்றங்கள் முன்பு போல நீண்ட இடை வெளியெடுத்து வருவதில்லை. 10 வருடங்களில், 5 வருடங்களில் ஏன் ஆண்டுதோறும் **புதிய மாற்றங்கள்** ஏற்படுவதை தவிர்க்க இயலாது. இதுபோன்று ஏற்படும் எந்த ஒரு புதிய மாற்றங்களையும் புதிய வாய்ப்புகளாக கருதி களமாடி முத்திரை பதிப்போம். தேவ நாமத்தை மகிமைப்படுத்துவோம்.

மிஷனரியாகவோ அல்லது உனக்கு பதிலாக மற்றொருவரை அனுப்பு அல்லது தாங்கு என்கின்ற கோஷம் இனி போதாது.

1. ஆகவே போ - அனுப்பு - சுதேச மிஷனரிகளை ஊக்குவி என்பதும்.
2. தமிழகத்தில் வாழும் வடஇந்தியரையே மிஷனரியாக்கி வடஇந்தியாவுக்கு அனுப்பி வைப்போம். தேசத்தைச் சுதந்தரிப்போம்.

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY - 620 001
Cell : 94434 15484



# கர்த்தரின் ஈவாகிய இனிய மணவாழ்வு

**Rev. Dr. ராஜசேகர்**

முன்னாள் முதல்வர், AG தமிழ்நாடு வேதாகம கல்லூரி

மனிதராகிய நம்மை தெய்வம் தன் சாயல் படைத்துள்ளார். தெய்வத்துவத்தில் தந்தை, மைந்தர், தூய ஆவி என்று மூன்று நபர்கள் ஒரே தெய்வமாக ஒருமித்து செயல்படுவது போன்று மனிதராகிய நாமும் செயல்பட, மனிதரை ஆணும் பெண்ணுமாகப் படைத்துள்ளார். தெய்வீகக் குணங்களை முழுமையும் ஆணுக்கோ அல்லது பெண்ணுக்கோ கொடுத்துவிடாமல் ஆண்மையின் பொதுவான குணங்கள், பெண்மையின் பொதுவான குணங்கள் என்று பகிர்ந்து கொடுத்திருப்பதால் ஆண், பெண் இருவரும் தங்கள் பொதுவான குணங்களை இணைத்துச் செயல்படும்போது மட்டுமே மனிதர் தெய்வசாயலாகச் செயல்படமுடியும். ஓர் ஆணோ அல்லது பெண்ணோ தனித்து வாழ்வது இயலாத செயல் அல்ல என்றாலும், அது நன்மையானதல்ல என்பதால், ஒருவருக்கொருவர் ஏற்ற துணையாகக் கணவன், மனைவி என்று இணைந்து வாழும் திருமண உறவை தேவனே ஏற்படுத்தியுள்ளார். தெய்வத்துவத்திலுள்ள இனிய ஒருமைப்பாட்டினை மணவாழ்வில் அனுபவிப்பது மனுக்குலத்திற்கு தேவன் அன்போடு அளித்துள்ள மாபெரும் பரிசு. விழுகைக்கு முன் ஆதாமும் ஏவாளும் இந்த அன்புப் பரிசாகிய இனிய ஒருமைப்பாட்டை ஒளிவு மறைவின்றி முழுமையாக அனுபவித்தனர். தேவன் அதனை நல்லதென்று கண்டார்.

மனிதன் நன்மை தீமையை அறிய தேவனைச் சார்ந்து கொள்ளாமல், தானே தீர்மானிக்க தேவகட்டளையை மீறித் தன்னை தேவனிடமிருந்து துண்டித்து விட்டதால், மனித வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் பிரிவினை புகுந்துவிட்டது. அன்புள்ள தேவன் மனிதனை மீண்டும் முழுமையான உறவுக்குள் கொண்டுவரத் தமது வழிகாட்டுதலை வேதத்தில் கொடுத்துள்ளார். மனித வாழ்வின் முக்கிய பகுதியான மணவாழ்விற்கான ஆலோசனைகளை வேதத்தின் பலபகுதிகளில் கொடுத்திருந்தாலும், கணவன் மனைவியாக வாழும் மணவாழ்வின் இனிமையைக் கவிதை வடிவில் வழங்கியுள்ள உன்னதப்பாட்டு நூலின் கருத்துக்களை இத்தொடர் கட்டுரையில் கற்றுக் கொள்ளப்போகிறோம்.

**வேதத்தைப் பொருள்படுத்தும்முறை**

மனித வாழ்வுக்கு வழிகாட்டியான வேதம் வெறும் உரைநடையாகவே எழுதப்படாமல், வரலாறு, போதனை, கட்டளைகள், கவிதை, நாடகம், விவாதம், உவமை, கடிதம், அடையாள விவரிப்பு போன்ற பல விதங்களில் எழுதப்பட்டுள்ளது. எனவே, இப்பகுதிகளைப் பொருள்படுத்த வேறுவேறு முறைகள் கடைபிடிக்கப்பட வேண்டும். பெரும்பாலான வேத பகுதிகளை, வழக்கமாக எல்லா நூல்களையும் புரிந்துகொள்வது போன்று நேரடியான பொருள்படுத்தல் முறையில் புரிந்து கொள்ளலாம். மனித நிகழ்வுகள் மூலம் ஆவிக்குரிய உண்மையைக் கற்றுக் கொடுக்கும் பகுதிகளை மாதிரியாகப் பொருள்படுத்தல் முறையில் புரிந்து கொள்ளலாம். அடையாள மொழியில் எழுதப்பட்டுள்ள சில பகுதிகளை மட்டும் உருவகப் பொருள்படுத்தல் முறையில் புரிந்து கொள்ள வேண்டும்.

கவிதையாக எழுதப்பட்டுள்ள உன்னதப்பாட்டு நூலையும் முதலாவது, நேரடி பொருள்படுத்தல் முறையில் புரிந்துகொண்டு, பின்னர் இயேசுவுக்கும், திருச்சபைக்கும் உள்ள உறவை விவரிக்க,மாதிரியாகப் பொருள்படுத்தல் முறையையும் பயன்படுத்தலாம். ஆனால், உருவகப் பொருள்படுத்தல் முறையில் எபிரெயப் பண்பாட்டின்படி எழுதப்பட்டுள்ள கவிதைக்கு ஒவ்வொருவரும் தங்கள் எண்ணப்படி கொடுக்கும் விளக்கம் விபரீதமாகவே இருக்கும். கர்த்தரின் நோக்கப்படி கணவன் மனைவி இடையே இருக்கவேண்டிய இனிய உறவை விளக்கும் எபிரெயக் கவிதைகளின் தொகுப்பான உன்னதப்பாட்டு நூலை நாம் புரிந்து, கைக்கொள்ளும் விதத்தில் இக்கட்டுரை விளக்குகிறது. நேரடியான பொருளில் கணவன் மனைவி உறவை தேவன் வழிகாட்டும் விதத்தில் சீரமைத்து, அடுத்த கட்டமாக மாதிரியாகப் பொருள்படுத்தி இயேசுவுக்கும் திருச்சபைக்கும் இருக்க வேண்டிய ஆவிக்குரிய உறவையும் சீர்படுத்தலாம்.

## உன்னதப்பாட்டு நூலின் அமைப்பு

இந்நூலை சாலொமோனின் வாழ்வில் நடந்த நேசத்திருமணத்தின் விளக்கம் என்றும், சாலொமோன் தான் விரும்பிய பெண்ணை அடைய எடுத்த முயற்சிகளின் தோல்வியின் வரலாறு என்றும், எபிரெயத் திருமணக் கொண்டாட்டங்களில் பாடுவதற்காக சாலொமோனால் எழுதப்பட்ட அல்லது சாலொமோனுக்கு சமர்ப்பிக்கப்பட்ட கவிதைகளின் தொகுப்பு என்றும் வெவ்வேறு விதமாக விளக்குபவர்கள் உள்ளனர். தேவனால் மனுக்குலத்திற்கு அருளப்பட்ட வழிகாட்டியான வேதத்தின் ஒரு நூலாகவும், யூதர்களால் பஸ்கா பண்டிகையில் வாசிக்கப்படும் நூலாகவும் உன்னதப்பாட்டு இருப்பதால், இதனை சாலொமோனின் தனிவாழ்வில் வெற்றியடைந்த அல்லது தோல்வியடைந்த முயற்சியாக எடுத்துக்கொள்ளாமல், தேவ வழிகாட்டுதலாக எபிரெயத் திருமணவாழ்வுக்கு அளிக்கப்பட்ட கவிதைகளை நமக்கும் தேவனுடைய வழிகாட்டியாகப் புரிந்து கொள்வதே வேதத்திற்கு நாம் அளிக்கும் மரியாதையாக இருக்கும். இனிய மணவாழ்விற்கு வழிகாட்டும் கவிதைகளின் தொகுப்பாக இந்நூலை ஏற்றுக்கொண்டு, இந்நூலைக் கீழ்க்கண்டவாறு பகுத்துக் கொள்ளலாம்.

1. முன்னுரை 1:1-4
2. முதல் கவிதை 1:5-2:7
3. இரண்டாம் கவிதை 2:8-3:5
4. மூன்றாம் கவிதை 3:6-5:1
5. நான்காம் கவிதை 5:2-6:3
6. ஐந்தாம் கவிதை 6:4-8:4
7. முடிவுரை 8:5-14

உன்னதப்பாட்டு நூல், 140 ஆண்டுகளுக்கு முன்புள்ள புரிந்து கொள்ளுதல் மற்றும் மொழி வழக்கின்படி உரைநடையாக நம் தமிழ் வேதத்தில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. ஆனால், நாம் தற்காலத்தில் புரிந்துகொள்ள வசதியாக இருக்க பல ஆங்கில மொழி பெயர்ப்புகள் மற்றும் வேத வல்லுனர்களின் கருத்துகளின்படியான மொழிபெயர்ப்பையும், வரிவரியான விளக்கமாகயிராமல், நாம் கடைபிடிக்க வேண்டிய கருத்துக்களையும் இத்தொடர்கட்டுரையில் தருகிறேன். நான் கூறுவதே சரி என்ற மனப்பான்மையில் அல்லாமல், இக்கருத்துக்களின்படி நம் மணவாழ்வை அமைப்பது தேவ நோக்கத்தை நம் வாழ்வில் நிறைவேற்றும் என்ற எதிர்பார்ப்பில் இக்கட்டுரை எழுதப்படுகிறது.

## கர்த்தரின் ஈவாகிய இனிய மணவாழ்வு

### முன்னுரை: உன்னதப்பாட்டு 1:1-4

1. பாடல்களில் மேன்மையான பாடல், சாலொமோனுக்குரியது.
2. உமது அன்பின் வெளிப்பாடாக என்னை முத்தமிடும். உமது அன்பின் உறவு மதுவை விட மிகுந்த பூரிப்பைத் தருகிறது.
3. உமது வாசனைத் தைலத்தின் நறுமணம் இன்பத்தைத் தூண்டுகிறது. பரவியுள்ள உம் நற்பெயர் மிகவும் மேன்மையானது. இளம்பெண்கள் உம்மை விரும்புவது இயல்பானதே!
4. உம்மோடு என்னை இழுத்துக் கொள்ளும், நாம் விரைந்து செல்வோம். என் அரசன் என்னை தம் அறைகளுக்குள் அழைத்துச் செல்வாராக! நாங்கள் உம்மில் மகிழ்ந்து பூரிப்படைவோம். உமது அன்பின் உறவை மதுவைவிட மேலானதாக உயர்த்துவோம். அவர்கள் உம்மை விரும்புவது சரியானதே!

சாலொமோனால் எழுதப்பட்ட அல்லது சாலொமோனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பாடல்களின் தொகுப்பு இந்நூல். சில யூத இரபிமார், சாலொமோன் என்ற பெயர் மெய்ச்சமாதானம் அருளும் கர்த்தருக்கே உரியது என்றும், எனவே இந்நூல் கர்த்தருக்கு(யாஹ்வேக்கு) அர்ப்பணிக்கப்பட்டது என்றும் கூறுகின்றனர். இப்பாடல் தொகுப்பு மனித வாழ்வின் மிக முக்கிய பகுதியான மணவாழ்வைப் பற்றியதாக உள்ளதால், மனிதர்களின் மற்ற எல்லாப் பாடல்களை விட இது மேன்மையானது என்று எபிரெய மொழிநடைப்படி பாடல்களின் பாடல் என்று அறிமுகப்படுத்தப் படுகிறது. இப்பாடல்களின் அறிவுரைகளைப் பின்பற்றினால், நமது மணவாழ்வும் மேன்மையானதாக விளங்கும்.

இக்கவிதை பெரும்பாலும் தலைவன் மற்றும் தலைவியின் பேச்சுகளாகவும் இடையிடையே இளம்பெண்களின் பல்லவிகளும் மற்றும் இயற்றியவரின் கருத்துக்களுமாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் கூறப்பட்டுள்ள பெரும்பான்மை யான கருத்துக்கள் கணவன் மற்றும் மனைவி இருவருக்கும் பொருந்தக்கூடியவை யாகவும், சில மனைவிக்கு மட்டும் என்றும் சில கணவனுக்கு மட்டும் என்றும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவை. இனி இக்கவிதையின் முன்னுரை கூறும் ஆலோசனையைக் கற்போம்.

மணவாழ்வு இனிமையானதாக அமைய, கணவன் மனைவியரிடையே இருக்க வேண்டிய எதிர்பார்ப்புகள், இவற்றை சிறப்பாக நிறைவேற்ற இருவரும் செய்ய வேண்டிய கடமைகளைத் தலைவியின் வார்த்தைகளாக முன்னுரை எடுத்துரைக்கிறது.

கணவன் தனக்குப் பயன்படும் பொருளாகத் தன்னைக் கருதாமல், அன்பாக இருக்கிறார் என்பதைச் செயலில் காட்டவேண்டும் என்பது மனைவியின் எதிர்பார்ப்பு. முத்தமிடுதல் அன்பை வெளிப்படுத்தும் செயலாக இருப்பதால், முத்தமிடுதலும் இதுபோன்ற செயல்களும் கணவன் மனைவியிடையே அடிக்கடி நிகழவேண்டும்.

மனிதருக்கு மகிழ்வைத் தருபவை பல இருந்தாலும், நிறைவான பூரிப்பைத் தருவது கணவன் மனைவியின் தாம்பத்திய உறவே. இதனைக் கடமைக்காகவோ, ஒருவரின் தேவையை மட்டும் நிறைவேற்றவோ இல்லாமல், இருவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும் அனுபவமாக்க இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, இருவரும் இன்பம் அனுபவிக்க வேண்டும்.

கணவன் மனைவி இருவரின் உடல்களும் ஒருவருக்கொருவர் விரும்பத்தக்க வகையில் அவரவர் பராமரித்துப் பேண வேண்டும். மற்றவர்கள் தன்னைத் திரும்பிப் பார்க்க வேண்டும் என்பதற்காக அல்லாமல், தன் துணை விரும்பும் விதத்தில் தான் இருக்க வேண்டும் என்று அவரவர் அக்கறை எடுக்க வேண்டும்.

உடல்களைப் பராமரித்துப் பேணுவது தேவையானது. ஆனால், அதைவிட மேன்மையானது நற்குணம். வாழ்க்கைத் துணையிடமும், உறவினர்கள், அயலகத்தார், நண்பர்கள் மற்றும் உடன்வேலை செய்வோர் மத்தியிலும் நற்பெயர் சம்பாதிப்பது மணவாழ்வையும் உறுதிப்படுத்தும். எனவே தனது குணநலன்களில் வளருவது இனிய மணவாழ்வின் அடிப்படைகளில் ஒன்று,

பிறபெண்களை போகப்பொருளாகவே பார்க்காமல், தேவசாயலில் படைக்கப்பட்டு தேவனால் நேசிக்கப்படுகிறவர்கள் என்ற உணர்வோடு கண்ணியமாக நடந்துகொள்வது மனைவியைப் பொறாமை மற்றும் சந்தேகம் அடைவதற்குப் பதிலாகப் பெருமிதம் அடையச் செய்யும். பிறபெண்களின் மதிப்பைப் பெற்றிருந்தாலும், தன் மனைவியை வசீகரித்துத் தன் அன்பில் பாதுகாப்பை உணரும் செயல்களைக் கணவன் அக்கறை எடுத்துச் செய்ய வேண்டும். அப்பொழுது மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும்.

மணவாழ்வில் கணவனும் மனைவியும் அரசனும் அரசியுமாக உள்ளனர். அதற்குரிய மதிப்போடு ஒருவரையொருவர் நடத்தவும், நடந்து கொள்ளவும் வேண்டும். தன் கணவன் தன் வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் தனக்குப் பங்களிப்பு தர வேண்டும் என்ற மனைவியின் எதிர்பார்ப்பைக் கணவன் நிறைவேற்ற வேண்டும். அதோடு தாம்பத்திய உறவைத் துவக்கிச் செயல்படுத்துவதில் கணவன் முன்னிற்க வேண்டும் என்பது மனைவியின் பொதுவான எதிர்பார்ப்பு. இவ்வாறு கணவன் தன் மனைவியைத் தன் எல்லாச் செயல்பாடுகளிலும் சமபங்காளியாக்கி, தாம்பத்திய உறவைத் துவக்கிச் செயல்படுத்தும்போது அவர்கள் இருவரும் நிறைவான பூரிப்பை அநுபவிப்பர். இருவரும் பூரிப்படைவதே தாம்பத்திய உறவின் நோக்கமாக இருந்து அதற்கான விட்டுக் கொடுத்தலையும் ஒத்துழைப்பையும் ஒருவருக்கொருவர் அளிக்க வேண்டும்.

இருவரும் பூரிப்படையும் தாம்பத்திய உறவை மேன்மையானதாகக் கருதி, அதற்கான நேரத்தையும் சூழலையும் ஏற்படுத்தி, மகிழ்வோடு எதிர்பார்க்கும் மற்றும் நிறைவோடு நினைத்துப் பார்க்கும் நிகழ்வாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

கணவன் மனைவி இருவரும் நிறைந்த பூரிப்போடு வாழும்போது மற்றவர்களுக்கு முன்மாதிரியாகவும் மதிக்கப்படத்தக்க தம்பதியாகவும் வாழ முடியும்.

முன்னுரையில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள், கணவனும் மனைவியும் நிறைவோடும், மதிப்போடும் வாழ்வதற்கான துவக்கமே. இவற்றை இடைவிடாமல் அக்கறையோடு கடைபிடிப்போம். மேலும் ஐந்து கவிதைகளிலும், முடிவுரையிலும் தேவன் நமக்காக வைத்துள்ள ஆலோசனைகளை வரும் இதழ்களில் கற்று கடைபிடிக்க ஆயத்தமாவோம்.

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

## நீதிமொழிகளில் காணப்படும் ஏழு வகையான மனிதர்கள்

நீதிமொழிகள் ஏழு வகையான மனிதர்களை பற்றி நமக்கு கூறுகிறது.

**1. பேதை : (SIMPLE)**

இவர்கள் அனைத்தையும் நம்பும் அறிவிலிகள். புத்தியீனமான காரியங்களை செய்து, ஆபத்தில் சிக்குண்டு, அடிக்கப்படும் மாட்டைபோல் பலியாவார்கள் (நீதி.14:1,18;7:22; 1:32) இதில் வியக்கத்தக்க காரியம் எதுவென்றால், இவர்கள் அறிவை வெறுத்து, பேதைமையையே விரும்பி, எப்பொழுதும் பேதையராகவே வாழ்வதில் பிரியப்படுகின்றனர் (நீதி. 1:22; 8:4-5).

**2. மூடன் : (STUPID)**

மூடர்கள் எனப்படுவோர் ஞானத்தை அலட்சியம் பண்ணி, பெற்றோர்களின் புத்திமதிகளுக்கு செவி கொடுக்க மறுக்கிறவர்கள் (நீதி.1:7;15:5). இவர்களது அலட்சியமும், கவனமின்மையும், நிர்விசாரமும் இவர்களை அழிக்கிறது (நீதி. 1:32). மூடர்கள் தங்கள் மூடத்தனமான பேச்சால் அழிவையும், மதியற்ற விவாதங்களால் பகையையும், பின்பு தண்டனையையும் வருவிப்பார்கள். மூடர்கள் தீமையை விரும்பி, அதை விடாமல் பற்றிக்கொள்கிறவர்கள் (நீதி.18:6,7;13:19). மூடர்கள் ஒழுக்கத்தையும், கண்டிப்பையும், வெறுப்பார்கள். தங்கள் தவறுகளை திருத்திக்கொள்ள மறுப்பார்கள். எனவே தங்கள் மதியீனத்தால் மரிப்பார்கள் (நீதி.27:22;12:1;10:21). மூடர்கள் பெருமையுடன் தங்கள் மதியீனத்தை வெளிப்படுத்தி, அவமானத்தை சம்பாதிப்பார்கள். மேலும் நாயானது தான் கக்கினதை தின்னும்படி திரும்புவது போல மீண்டும் தங்கள் மூடத்தனத்துக்கு திரும்புவார்கள் (நீதி. 3:35; 13:16; 24:7; 26:1,11).

**3. பரியாசக்காரன் : (SCORNER, SCOFFER)**

அகந்தையினால் நிறைந்து, கொடிய செயல்களை செய்கிறவரும், அறிவுரைகளை கேளாதவரும், ஆணவம் மிக்கவர்களும், தங்களை நல்வழிப்படுத்த முயற்சிப்பவர்களை வெறுப்பவர்களும், எவர்களோ, அவர்களே பரியாசக்காரர்கள். (நீதி.21:24;9:7,8;13:1). பரியாசக்காரர்கள் இத்தகையோர் எப்பொழுதும் கலகம்செய்து வீட்டிலும், நகரத்திலும், நாட்டிலும் நாசத்தை உண்டாக்குகிறவர்கள் (நீதி. 22:10; 29:8).

**4. சோம்பேறி : (SLUGGARD)**

உள்ளத்தில் உற்சாகமும், நோக்கமும், சுறுசுறுப்பும் இன்றி, உடலில் உழைப்பின்றி இருப்பவர்கள் சோம்பேறிகள். இவர்கள் தாங்கள் வேலை செய்யாமல் இருப்பதற்கு ஒருவராலும் நம்பவும், ஏற்றுக்கொள்ளவும் முடியாத விதமான சாக்கு போக்குகளை கூறுபவர்கள் (நீதி.22:13). எந்தவிதமான வேலையும் செய்ய சம்மதியாமல் வீணாய் தங்கள் பொழுதை கழிப்பார்கள். ஆகையால் அவர்கள் வறுமையில் வாடுவார்கள். இவர்கள் சோம்பேறிகள் என்பதால் இவர்களுக்கு யாரும் இரக்கம் காட்டவோ, உதவி செய்யவோ மறுத்து விடுவார்கள். சோம்பேறி எறும்பை கவனித்து பார்த்து வாழ்வு முறையை கற்றுக்கொள்ள வேண்டும் என்று வேதம் அறிவுறுத்துகிறது (நீதி.6:6-11; 20:4; 10:4). சோம்பேறிகள் அதிகமான தூக்கத்தை விரும்புகிறவர்கள். அவர்களுக்கு கிடைக்கும் உணவு பொருளை சமைக்கக் கூட மறுப்பவர்கள். சமைத்த உணவே கிடைத்தாலும் கூட அதை எடுத்து உண்பதற்கு

சலித்து கொள்பவர்கள். இதனால் அவர்கள் வறுமையாலும், பட்டினியாலும் மடிய வாய்ப்புண்டு (நீதி. 20:13; 19:15; 24:34,35; 12:27).

**5. துன்மார்க்கன் : (SINNER)**

சகலவிதமான தீய குணங்களின் குடியிருப்பாய் விளங்குபவரே துன்மார்க்கர். அவர்கள் மரியாதையின்றியும் கண்ணியமின்றியும், பரியாசமாய் பேசுகிறவர்கள்; எல்லோரையும் பகைக்கிறவர்கள்; ஒருவருக்கும் பயனற்றவர்கள் (நீதி.6:12;14:21). கர்த்தர் துன்மார்க்கரையும், அவர்கள் வழிகளையும், காணிக்கையையும், ஜெபத்தையும் அருவருக்கிறார் (நீதி.15:8,9). துன்மார்க்கர் தங்கள் பொல்லாத வழிகளினாலேயே அழிவை அடைவார்கள் (நீதி. 14:32).

**6. ஞானவான் : (SAGE)**

ஞானவான்கள் அறிவையும், புத்தியையும், ஞானத்தையும் விலையேறப் பெற்ற பொக்கிஷத்தைப் போல தேடுகிறவர்கள்; கர்த்தருக்கு பயப்படுதலே ஞானம் என்று கண்டுணர்ந்து கொள்கிறவர்கள். ஞானத்தின் நெறிகளிலே நடக்கிறவர்கள், தீமைக்கு விலகி, நன்மைசெய்து, பிறரின் நல்மதிப்பையும் நல்நம்பிக்கையையும் சம்பாதிக்கிறவர்கள். இவர்கள் கர்த்தரின் வழியிலே செம்மையாய் நடக்கிறபடியால் கண்ணியிலும், பாவத்திலும் சிக்கிக்கொள்ளமாட்டார்கள். இம்மையிலும், மறுமையிலும் கனம் அடைவார்கள் (நீதி. 2:4-5; 4:7-9; 3:23,25).

**7. நீதிமான் : (SAINT)**

நியாயமானதை செய்து, நேர்மையான வழியிலே நடக்கிறவர்கள் நீதிமான்கள். அவர்கள் வாழ்வு குற்றமற்றதாகவும் சுத்தமானதாகவும், பிரகாசமாகவும் இருக்கும். அவர்கள் பேச்சிலும், செயலிலும் இனிமையும், உண்மையும் நிறைந்திருக்கும் (நீதி.4:18; 8:20; 10:21,32; 12:5). நீதிமான்கள் தேவனின் பரிசுத்தமான வழிகளை கற்றுக்கொள்ள ஆவல் உடையவர்கள். சிங்கத்தைப்போல தைரியமுடையவர்கள். ஏழைகளின் நியாயத்தை மதிக்கிறவர்கள் (நீதி. 9:9; 10:6; 28:1,7). நீதிமான்கள் செய்யும் செயல்களின் முடிவு ஜீவனும், ஆசீர்வாதமுமாய் இருக்கும். அவர்கள் கனிதரும் பயனுள்ள வாழ்வு வாழ்கிறவர்கள். அவர்கள் கர்த்தருக்கு பயந்து நீதி நியாயத்தை உறுதியாய் கடைபிடிப்பதால், நிரந்தர அஸ்திவாரமுள்ளவர்களாய், அசைக்கப்படாதிருப்பார்கள் (நீதி. 10:16,25,30; 12:12).

இவர்களில் நாம் எந்த வகையை சேர்ந்தவர்கள்?

---


**பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்**

குறிப்பு: காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**

30, நாவலர் நகர், மதுரை-625 016. போன் : 0452 2301165.



# புறப்பட்டு போங்கள்...

**Rev. V. லாரன்ஸ் மனோஜ்குமார்**

உதவி இயக்குநர், வடமேற்கு மிஷன்

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் பத்திரிகை வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

லூக்கா 10:3-ல், இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களை நோக்கி "புறப்பட்டுப் போங்கள்" என்று கூறுவதை காண இயலும். அவர் பரமேறி போகுமுன்னதாக தம்முடைய சீஷர்களுக்கு, அவர்கள் புறப்பட்டுபோக வேண்டிய நோக்கம், எல்லை, அதற்குரிய செய்தி ஆகிய அனைத்தையும் பிரதான கட்டளையாக (Great Commission) கூறினார். மத்தேயு 28:19-20-ல் இதை நாம் வாசிக்கிறோம். தம்மை பின்பற்றி வரவிருக்கிற பின் தலைமுறையினரும் தமது இரண்டாம் வருகை வரையிலும் இந்த பிரதான கட்டளையை நிறைவேற்ற வேண்டும் என்பதே இயேசுவின் விருப்பம்.

"புறப்பட்டுப் போய்" என்கிற வார்த்தை ஒரு செயல்பாட்டை குறிக்கிறது. செயல்பாடு அல்லது செயல்படுவதை குறிக்கிறது. It is a deliberate action and it requires an effort. இந்த செயல்பாட்டிற்கு ஒரு முயற்சி அவசியமாக இருக்கிறது.

ஆத்தும ஆதாயம் செய்வதற்கு அல்லது சீஷர்களை உருவாக்குவதற்கு முயற்சி எடுத்தாலன்றி அது சாத்தியமாகாது என்பதை இது தெளிவுப்படுத்துகிறது. இயேசுவுக்காக வாழ வேண்டும். ஊழியம் செய்ய வேண்டும், சுவிசேஷத்தை பறைசாற்ற வேண்டும் என்கிற வாஞ்சை, விருப்பம், ஏக்கம் அநேகரது உள்ளத்தில் இருந்தாலும், அதற்கென்று விசுவாசத்தோடும், தைரியத்தோடும் "புறப்பட்டுப் போகிற" ஒரு செயல்பாடு, ஒரு முயற்சி இல்லாதபட்சத்தில், அது வெறும் விருப்பமாக, எண்ண அளவில் மட்டும் (only in mind) நின்றுவிடும்; செயல்வடிவம் பெறாது. அப்படியானால், சீஷத்துவம் நடைபெற வேண்டுமேயானால், மக்களை, மக்களினங்களை சந்திக்க திருச்சபை மக்கள் தங்கள் வசதியின் எல்லைகளை (comfort zone) விட்டு சற்று வெளியே புறப்பட்டு செல்ல வேண்டும்.

உலகில் உள்ள 4104 மக்களினங்களில், 3682 மக்களினங்கள் இன்னமும் சந்திக்கப்படாத நிலையில் உள்ளனர். தென் ஆசியாவில் மட்டும் ஏறக்குறைய 150 கோடி மக்கள் இன்னமும் சுவிசேஷத்தால் சந்திக்கப்படாத நிலையில் உள்ளனர். இவர்கள் சந்திக்கப்படுவதற்கு ஜெபிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல், திருச்சபைகள் எழும்பி தங்களால் இயன்ற ஏதோ ஒரு முயற்சியை மேற்கொள்வதே இன்னும் ஒரு சில மக்களினங்கள் சந்திக்கப்படுவதற்கு ஏதுவாகும்.

''புறப்பட்டு போவது'' என்பது நமது வசதியின் எல்லைகளைவிட்டு கடந்துபோவது மாத்திரமல்ல, மற்ற மக்களினங்களைக் குறித்து நமக்குள் இருக்கும் தவறான அபிப்ராயம்/பாரபட்சம் (prejudice) அதனை விட்டும் வெளியே கடந்துபோவதாக இருக்கும்.

யூதராகிய அப்போஸ்தலர் பேதுருவிற்கு, யூதரல்லாத பிற ஜன மக்கள் (Gentiles) மீது இருந்த இத்தகைய பாரபட்சத்தை பரிசுத்த ஆவியானவர் சுட்டிக்காண்பித்து, அவரது மனப்பான்மையை மாற்றி, அற்புதமாக பேதுருவை பிற

ஜனமக்களிடமும் பயன்படுத்தினார், பேதுருவை புறப்பட்டு போகச் செய்தார் என்பதை அப்போஸ்தலர் 10:9,20,28,29,44-48/11:1 ஆகிய வசனங்களில் காண்கிறோம். ஒரு குறுகலான மனப்பான்மையினின்று, பரந்த மனப்பான்மைக்குள் செல்பவர்கள் மட்டுமே பிரதான கட்டளையை கர்த்தர் விரும்பும் விதத்தில் நிறைவேற்ற முடியும்.

**இரண்டாவதாக,** புறப்பட்டு போகிற செயல்பாடு ஒரு விசுவாச செயல்பாடு. விசுவாசத்தில் அடி எடுத்து வைப்பதாகும். It is an action of faith. ஆன்மீக ரீதியான அல்லது நமது ஆண்டவரோடு தொடர்புடைய எந்த செய்கையும் விசுவாசத்தை அடிப்படையாக கொண்டது. அப்படி விசுவாசத்தில் புறப்பட்டு சென்றவர்கள். சீஷத்துவ பணியில், மாற்று கலாச்சார மக்களை சந்திப்பதில் சாதித்தவர்கள் என்பதை சரித்திரத்தில் காண முடியும்.

கர்த்தருடைய வார்த்தையை நம்பி ஏற்றுக்கொண்டு, அவரது கட்டளைக்கு கீழ்ப்படிந்து நம்மை அர்ப்பணித்து செயல்படுவதே அந்த விசுவாசத்தின் வெளி அடையாளம்.

**மூன்றாவதாக,** இது இயேசு கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தை அடிப்படையாக வைத்து செயல்படுகின்ற செய்கை. (An action based on Christ's promises). அவர், "உலகத்தின் முடிவுபரியந்தம் உங்களுடனே இருப்பேன்" என்று (புறப்பட்டு செல்பவர்களுக்கு) வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார். மட்டுமல்ல, தேவையை சந்திப்பதாகவும், பாதுகாப்பளிப்பதாகவும், பிசாசுகளை துரத்தவும், நோய்களை குணமாக்கவும், அதிகாரமளிப்பதாகவும் வாக்கு கொடுத்துள்ளார் (லூக்கா 10:19,20;மத்தேயு 10:28).

**நான்காவதாக,** "புறப்பட்டு போவது கர்த்தரை நம்பி, அதே வேளையில் எச்சரிப்போடு செயல்படுகிற செய்கை. (It is a Watchful Action, Trusting God). கொடுமையான இந்த உலகத்தில், ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல உங்களை அனுப்புகிறேன் என்று ஆண்டவர் இயேசு சொன்னதை வாசிக்கிறோம் (மத்தேயு 10:16). எச்சரிப்போடு கர்த்தருக்காக செயல்படுவது வேறு, ஒன்றும் செய்யாமல் பயந்து ஒதுங்கி நிற்பது வேறு. ஒதுங்கி நிற்காமல், எச்சரிப்புடன் செயல்பட (புறப்பட்டு செல்ல, முயற்சி எடுக்க) கர்த்தர் நம்மை பெலப்படுத்துவாராக.

**ஐந்தாவதாக,** புறப்பட்டு செல்வது கீழ்ப்படிதலின் செய்கை. It is an act of obedience. புறப்பட்டு போவது அவரது கட்டளைக்கு கீழ்ப்படிதலின் அடையாளம். இயேசு கிறிஸ்துவின் ஆளுகையையும். அதிகாரத்தையும் கனம்பண்ணுவதற்கு அடையாளம். அதே வேளையில், இரட்சகராம் இயேசு கிறிஸ்துவின் நிமித்தம், இயேசு கிறிஸ்துவிற்காக அவரை முன்னிட்டு எடுக்கும் சிறு முயற்சிகளையும் பரலோகம் நிச்சயம் கனம்பண்ணும். கீழ்ப்படிந்த அவரது ஊழியர்களாகிய பல பரிசுத்தவான்களை நினைத்து பார்ப்போமாக! பெரிய அளவில் உடனே செயல்பட முடியாவிட்டாலும் சிறிய அளவில் ஆரம்பிக்கலாமே!

**இறுதியாக,** புறப்பட்டு போகின்ற செய்கை இயேசு கிறிஸ்துவோடு உள்ள உறவின் அடிப்படையில் செய்யப்படுகிற செய்கை. It is an act of Relationship with Christ. நாம் அவரை தெரிந்துகொள்ளவில்லை, தம்முடைய மகாப்பெரிய கிருபையினால் அவர் நம்மை தெரிந்துகொண்டார் (யோவான் 15:16). தம்மோடு நல்ல உறவில் இருந்தவர்களிடமும்/இருப்பவர்களிடமும் அவர் கொடுக்கிற கட்டளைதான் இந்த பிரதான கட்டளை (Great Commission).

பரிசுத்த ஆவியானவர் தாமே, யார் யார் எங்கெங்கு புறப்பட்டு செல்ல வேண்டும் என்பதற்கான உந்துதலையும், நடத்துதலையும், அதற்கு வேண்டிய தைரியத்தையும், கிருபையையும், வல்லமையையும் அருளிச்செய்வாராக.



# சாவாமை

## என்னும் தவறான போதனை


**Rev. K. பால்**

மூத்தப்போதகர், A.G.சர்ச், புதுக்கோட்டை


கிறிஸ்தவ உலகிலே இன்று சர்ச்சைக்குரிய விஷயமாக எங்கும் பேசப்படுகிற ஒரு காரியம் சாவாமைப் பற்றிய உபதேசமாகும். இந்த உபதேசத்தைக் கேட்டு குழப்படைந்து, ஒன்றும் புரியாது திகைத்து நிற்கிற விசுவாசிகள் ஏராளம். இந்த குழப்ப நிலை மாறவேண்டுமானால் ஆவியானவருடைய உதவியோடு வேத வசனங்களை தெளிவாக புரிந்து கொள்வதின் மூலமாகத்தான் இது சாத்தியமாகும்.

இந்த உபதேசத்தைக் குறித்து பேசுகிறவர்கள் மூல ஆதாரமாக எடுத்துக்கூறும் வசனம் யோவான் 11:26, அதாவது "உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் எவனும் மரியாமலும் இருப்பான்" என்பதே. இது லாசர் மரித்துப்போனபோது அவன் சகோதரியாகிய மார்த்தாள் இயேசுவினிடத்தில் வந்து, ஆண்டவரே நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கத்திருக்கமாட்டான். இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக் கொள்வதெதுவோ அதை தேவன் உமக்கு தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன் என்றாள். இயேசு அவளை நோக்கி, உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார். அதற்கு மார்த்தாள், உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசி நாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள். இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான். இதை விசுவாசிக்கிறாயா என்றார். அதற்கு அவள் : ஆம் ஆண்டவரே நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன் என்றாள் (யோவான் 11:21-27).

இன்றைய ஆவிக்குரிய உலகிலே ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு வசனத்தைப் பிடித்துக்கொண்டு, இதுதான் சத்தியம் என்று அடித்து பேசி ஜனங்களை அதிர்ச்சியடைய வைப்பதோடு அதையே உபதேசமாக மாற்ற துடிப்பத்தையும் பார்க்கும்போது, யானை எப்படியிருக்கும் என்று பார்க்கச் சென்ற குருடர்கள் யானையின் ஏதோ ஒரு உறுப்பை தடவிப் பார்த்துவிட்டு யானை இப்படிதான் இருக்கும் என்று அடித்துப்பேசும் அந்த வேடிக்கையான கதைதான் எனக்கு ஞாபகம் வருகிறது.

இந்த சாவாமையின் உபதேசத்தை நாம் சரியாக புரிந்துகொள்ள வேண்டுமானால், முதலாவது சாவு அல்லது மரணம் குறித்து வேதம் என்ன சொல்கிறது என்பதை புரிந்துகொள்வது மிகவும் அவசியமாகிறது. பொதுவாக மரணம் என்பது பிரிவு என்று பொருள்படுவதாகவே உள்ளது. அதாவது சரீரத்தை விட்டு ஆவி பிரிந்துவிட்டால் அதை சாவு அல்லது மரணம் என்கிறோம். அநேகருக்கு இந்த ஒரே மரணத்தைக் குறித்துத்தான் தெரியும். அதனால்தான் குழப்பம். ஆனால் நம்முடைய பரிசுத்த வேதாகமமும் மூன்று விதமாக மரணங்களைக் குறித்து பேசுகின்றது. அவையானவன; 1.ஆவிக்குரிய மரணம் (Spiritual death), 2.சரீர மரணம் (Physical death), 3.நித்திய மரணம் (Eternal death) என்பவைகளே. இந்த மூன்று வகையான மரணம் அல்லது சாவைக்குறித்து நாம் தெரிவாக புரிந்து கொண்டோமானால் இந்த குழப்பமான உபதேசத்திலிருந்து நிச்சயமாய் விடுதலை பெறமுடியும்.

## 1. ஆவிக்குரிய மரணம் (Spiritual Death)

ஆவிக்குரிய மரணம் என்றால் என்ன? அதாவது மெய்யான தேவனை விட்டு ஒரு மனிதன் பிரியும்போது அவனுக்கு ஏற்படுவதுதான் ஆவிக்குரிய மரணம் அல்லது ஆவிக்குரிய சாவு.

"தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" (ஆதி.2:16,17). ஆனால் சர்ப்பமாகிய பிசாசோ ஆண்டவர் சொன்னதற்கு நேர்மாறாக : நீங்கள் இதை புசிக்கிற நாளில் சாகவே சாவதில்லை என்று கூறி, அவர்களை ஏமாற்றியது. இதுதான் இன்றைக்கும் நடக்கிறது. சாவாமை என்ற கள்ள உபதேசத்தை சாத்தான் அன்று ஏதேன் தோட்டத்திலேயே விதைத்துவிட்டான்.

ஆண்டவர் படைத்த முதல் மனிதனாகிய அந்த ஆதாமும், அவனுடைய மனைவியாகிய ஏவாளும் பிசாசின் அந்த ஆசை வார்த்தைக்கு செவிகொடுத்து ஆண்டவரின் வார்த்தையை மீறி அந்த நன்மை தீமை அறியத்தக்கதான விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியை புசித்து பாவம் செய்தார்கள். ஆண்டவர் சொன்ன வார்த்தையின்படியே அந்த மரத்தின் கனியை புசித்த நாளிலே ஆதாம் செத்தானா? இந்த கேள்விக்கு இல்லையென்றுதான் இன்றைக்கும் அநேகர் பதில் சொல்வார்கள். ஏனென்றால் ஆதாம் தொள்ளாயிரத்து முப்பது வருடம் உயிரோடிருந்தான் என்று வேதம் கூறுகின்றது (ஆதி.5:5). அப்படியென்றால் ஆண்டவர் சொன்ன "நீ சாகவே சாவாய்" என்ற வார்த்தை என்னவாயிற்று? அது நிறைவேறவில்லை என்பதுதானே. அப்படியல்ல, தேவன் சொன்னால் அது நிச்சயம் நடக்கும். ஆம், அவன் இங்கு சரீர பிரகாரமாக மரிக்கவில்லைதான். ஆனால் ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தான். அதாவது அது வரையிலும் ஆண்டவரோடே அவருடைய ஏதோன் தோட்டத்தில் மகிழ்ந்திருந்த ஆதாம், ஆண்டவருடைய வார்த்தையை மீறி விலக்கப்பட்ட மரத்தின் கனியை புசித்து பாவம் செய்த அந்த நாளில்தானே. ஆண்டவரை விட்டு, அவருடைய சமுகத்தைவிட்டு, அந்த அருமையான ஏதேனை விட்டு வெளியேற்றப்பட்டான். ஆண்டவரை விட்டுப் பிரிந்து ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தான்.

மெய்யான ஆண்டவரை விட்டு பிரிந்து பாவத்தில் வாழ்கிறவர் யாராயிருந்தாலும் அவர்கள் ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தவர்களே, ஆகையினால்தான் ஆண்டவரை பின்பற்ற நினைத்த ஒருவன், ஆண்டவரே, முன்பு நான் போய், என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும் என்று கேட்டபோது, ஆண்டவர் இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும். நீ என்னை பின்பற்றி வா என்றார் (மத்.8:21,22). ஆண்டவர் சொன்ன இந்த வார்த்தையின் அர்த்தம் என்ன? மரித்தோர் எப்படி மரித்தவர்களை அடக்கம்பண்ண முடியும்? ஆண்டவரைப் பற்றி நீ சரியாக அறிந்து கொள்ளாத பட்சத்தில் இதைப் புரிந்து கொள்ள முடியாது. நம்முடைய ஆண்டவர் சர்வ ஞானி. அவருடைய அறிவு நம்முடைய எண்ணங்களுக்கு அப்பாற்பட்டது. இங்கே "மரித்தோர்" என்ற வார்த்தையில் அவர் இரண்டு விதமான ஜனங்களை குறிப்பிடுகின்றார். ஒன்று ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தோர். இரண்டு சரீரபிரகாரமாக மரித்தோர். அதாவது ஆண்டவரை ஏற்றுக்கொள்ளாத, ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தவர்கள், சரீரபிரகாரமாக மரித்தவர்களை அடக்கம் பண்ணட்டும். நீ என்னை பின்பற்றி வா என்று அழைக்கின்றார். ஆவிக்குரிய மரணமும் சரீர மரணமும் வெவ்வேறு என்பதை இப்போது புரிந்துகொள்ள முடிகிறதா?

## 2. சரீர மரணம் (Physical Death)

இந்த சரீர மரணம் மனிதனால் பிறந்த எல்லோருக்கும் சம்பவிக்கும் ஒன்று. இதைத்தான் பரிசுத்த வேதாகமம். “அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே...” என்று குறிப்பிடுகின்றது (எபி.9:27). இந்த சரீர மரணத்தை யாரும் தடுக்க முடியாது. ஆதாம் தொளாயிரத்து முப்பது வருடம் வாழ்ந்து இந்த மரணத்தை அடைந்தான். ஆனால் சங்கீதக்காரனோ: எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷம் என்றான் (சங்.90:10). இந்த மரணம் ஐந்திலும் வரலாம். ஐம்பதிலும் வரலாம். பெலத்தின் மிகுதியால் எண்பதிலும் வரலாம். இந்த மரணத்தைத்தான் அன்று லாசருவை சந்தித்தார். இந்த மரணத்தைதான் நம்முடைய ஆண்டவரும் சந்தித்தார்.

அவர் சரீர பிரகாரமாக கல்வாரி சிலுவையிலே மரித்தார். மரித்த இயேசுவோ மரணத்தை ஜெயித்து வேத வசனத்தின்படி மூன்றாம் நாளிலே உயிரோடே எழுந்து அநேகருக்கு தரிசனமானார். இயேசு கிறிஸ்து உயிரோடே எழுந்ததினாலே கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்களுக்கும் உயிர்த்தெழுதல் உண்டு என்பது உறுதியாக்கப்பட்டுள்ளது. இதைத்தான் பரிசுத்தர் பவுல்: இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே. அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூட கொண்டு வருவார்.

...கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் என்று கூறுகின்றார் (1தெச.4:14-16). இயேசு அவளை நோக்கி, உன் சகோதரன் உயிர்த்தெழுந் திருப்பான் என்று சொன்னபோது, உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசி நாளில் அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று மரித்தோரின் உயிர்த்தெழுதலின் நம்பிக்கை கொண்ட மார்த்தாள் கூறினாள்.

இப்படியாய் சரீர மரணம் எல்லோருக்கும் நியமிக்கப்பட்ட ஒன்றாய் இருப்பதால் இதற்கு தப்ப யாராலும் முடியாது. ஆனால் நாம் கிறிஸ்துவுக்குள் பிறந்து, கிறிஸ்துவுக்குள் வளர்ந்து, கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து, கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்களாய் இருப்போமானால் நமது ஆண்டவர் மீண்டும் வரும்போது நம்மை உயிரோடே எழுப்புவார் என்பது வேதம் நமக்கு கொடுக்கும் நம்பிக்கை.

## 3. நித்திய மரணம் (Eternal Death)

நித்திய மரணம் என்பது, உலகத்திலுள்ள எல்லாவற்றையும் விட்டு நித்திய நரகத்தில் தள்ளப்படும் அனுபவத்தை குறிப்பிடுகின்றது. இது கடைசி வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பிலே ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டவர்களாக காணப்படாத எல்லோரும் அக்கினி கடலிலே தள்ளப்பட்டு நித்திய வேதனையை அடையும் அனுபவத்தை குறிப்பிடுகின்றது (வெளி.20:15). இதற்கு இரண்டாம் மரணம் என்ற ஒரு பெயரும் உண்டு. “முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான். இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை. இவர்கள் தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்” (வெளி.20:6) என்று வேதம் கூறுகின்றது.

இப்படியாய் பரிசுத்த வேதாகமம் கூறும் மூன்று விதமான மரணம் அல்லது சாவைக் குறித்து நாம் தெளிவாக புரிந்துகொள்வதினால் மாத்திரமே ஆண்டவர் மார்த்தாளிடத்தில் சொன்ன, ‘உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும்

என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்…"" என்ற வார்த்தையின் தர்ப்பரியத்தை நாம் அறிந்து கொள்ள முடியும்.

எபிரெயர் 9:27- சொல்லுகிறபடி, "ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" என்பதின் மூலம் உலகில் பிறந்த எல்லா மனிதனும் சரீர பிரகாரமாக மரித்துதான் தீரவேண்டும் என்பதை நாம் மறுக்கமுடியாது. எனவே ஆண்டவர் யோவான் 11:26-ல் கூறுகின்ற "என்னை விசுவாசிக்கிறவன் மரியாமலும் இருப்பான்" என்பது சரீர பிரகாரமான சாவாமையை குறிப்பிடுவதில்லை. அது நிச்சயமாக ஆவிக்குரிய பிரகாரமான சாவாமையைக் குறிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பாவம் செய்து ஆவிக்குரிய பிரகாரமாக மரித்த ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவனுடைய பாவங்களை மறைக்காமல் அவரிடத்தில் அறிக்கையிட்டால் அவனுடைய எல்லா பாவங்களையும் அவனுக்கு மன்னித்து, எல்லா அநியாயங்களையும் நீக்கி அவனை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் என்று வேதம் கூறுகின்றது (1யோவான் 1:9). மேலும் "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" (ரோமர் 6:23) என்று பரிசுத்தர் பவுல் கூறுகின்றார். ஆக, ஆவிக்குரிய பிரகாரமாக மரித்த ஒரு மனிதன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்படும்போது அவனுக்கு அவர் அழிவில்லாத நித்திய ஜீவனை கொடுத்துவிடுகிறார். தொடர்ந்து அவன் பாவம் செய்யாமல் பரிசுத்தமாக கிறிஸ்துவோடு வாழும்போது மீண்டும் அந்த ஆவிக்குரிய மரணம் அவனை சந்திக்காது. பரிசுத்த யோவான் தன்னுடைய முதலாம் நிருபத்தில் எழுதும்போது: தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான். ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. அவன் தேவனால் பிறந்தபடியால் பாவம் செய்யமாட்டான் என்று கூறுகின்றார் (1யோவான் 3:9).

இப்படியாய் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து மறுபடியும் பிறந்த மனிதன் நித்திய ஜீவனை உடையவனாய் இந்த உலகத்திலே உயிரோடே வாழும் நாட்களில் அவன் பாவம்செய்யாமல், தன்னை பரிசுத்தமாய் காத்துக்கொண்டு, தேவனோடு ஐக்கியமாய் இருப்பதினால் ஆவிக்குரிய மரணமாகிய அந்த சாவை சந்திக்காமல் ஆவிக்குரிய பிரகாரமாக என்றென்றைக்கும் மரிக்காமலும் இருப்பான் என்பதையே அவர் குறிப்பிடுகின்றார்.

இங்கே இயேசு கூறும் ''உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்'' என்ற வார்த்தை சரீரபிரகாரமான சாவாமையை குறிப்பிடாமல், அது ஆவிக்குரிய பிரகாரமான சாவாமையையே குறிக்கும் என்பது நன்கு விளங்கும்.

இந்த உண்மையை தெரிந்துகொள்ளாமல், புரிந்து கொள்ளாமல், பெரிய பரிசுத்தவான்களின் பெயரை சொல்லி விளம்பரம் தேட நினைக்கும் சில விசிலடிச்சான் பிள்ளைகளே, அந்த பரிசுத்தவான்களுக்கே தெரியாத உண்மையை ஆண்டவர் தங்களுக்கு வெளிப்படுத்திவிட்டார் என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளும் சில அரைகுறைகள் நாம் விசுவாசித்தால் சரீர பிரகாரமாக மரிக்காமல் என்றென்றைக்கும் உயிரோடிருப்போம் என்று கூறி ஜனங்களுக்கு ஆசை காட்டி அவர்களை மோசம் போக்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களும் நாம் சாகமாட்டோம் என்ற சந்தோஷத்தில் கைகளை தட்டுவதும், விசிலடிப்பதும், கூக்குரலிடுடகிறவர்களுமாயிருக்கிறார்கள். இவர்கள் கண்கள் திறக்கப்பட உண்மை சத்தியத்தை புரிந்துகொண்டு இந்த மோசக்கார கும்பலைவிட்டு வெளியேற கர்த்தர் கிரியை செய்யும்படியாய் ஊக்கமாய் ஜெபிப்போமாக!.



# வேரூன்றுங்கள்-Be Rooted

**Rev. D. சாலமோன்**

தலைவர், கிறிஸ்துவின் ஸ்தானிகர்கள் வாலிபர் ஊழியம்




ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். இந்த வேரூன்றுங்கள் என்ற தலைப்பின் மூலமாக உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

பரலோக இராஜ்யத்தின் இரகசியங்களை அநேக விசேஷங்களாக பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கின்றோம். மத்தேயு 13-ம் அதிகாரத்தில் விதைக்கிறவனின் விதை உவமையைக் குறித்து வாசிக்கிறோம். அதில் நான்கு விதமான நிலத்தில் விழுந்த விதையின் வளர்ச்சி குறித்து காண்கிறோம். அதில் மத்தேயு 13:5,6; 20,21 ஆகிய வசனத்தில் கற்பாறை நிலத்தில் விழுந்த விதை பலன் கொடுக்க தடையாக "வேரில்லாதபடியினால்" அது பலன்கொடுக்க இயலவில்லை. வேர்கள் எவ்வளவு முக்கியம் என்பதை உணருகிறோம். வேர்கள்தான் மரத்தின் வலிமை, செழுமை ஆகியவற்றை தீர்மானிக்கிறது. பவுல் எபேசு சபையாருக்காக (எபே.3:17) எழுதும்போது "அன்பிலே வேரூன்றி" என்று தனது ஜெபத்தில் குறிப்பிடுகிறார்.

வாலிபர்கள் பெரும்பாலும் முன்னேற்றம், வளர்ச்சி, சாதனை, அறிவு ஆகியவற்றிக்கு முக்கியத்துவம் கொடுப்பதை போல அவைகளுக்கு காரணமாக இருப்பவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் வாழ்வு மிகவும் ஆசீர்வாதமாகும்.

வாலிப சகோதர சகோதரிகளே, கிறிஸ்துவுக்குள் உங்கள் வாழ்வு வளம் பெறவும், பிற வாலிபர்களுக்கு உங்கள் வாழ்க்கை ஆசீர்வாதமாகிட வேரூன்ற வேண்டியவைகளை இப்பகுதியில் காண்போம்.

### 1. உத்தமத்தில் வேரூன்றுதல் : Be Rooted in Loyalty (யோவான் 1:47)

உத்தமம் என்பது மேலான அதிகாரமுடையவர்களுக்கு உண்மையாக கீழ்ப்படிதல் மற்றும் ஆரோக்கியமான உறவுக்கான அர்ப்பணிப்பாகும். இது வாழ்க்கையின் முக்கிய குணம், உத்தம குணத்தை தேவன் பாராட்டுகிறார். விசுவாசம், கீழ்ப்படிதல் நம்பகத்தன்மை ஆதரவையும் அர்ப்பணிப்பையும் தூண்டுகிறது.

2நாளா.16:6 உத்தம குணம் உள்ளவர்களை தேவனுடைய கண்கள் தேடிக்கொண்டிருக்கிறது. வீட்டில் பெற்றோருக்கு, உடன் பிறந்தவர்களுக்கு, ஆசிரியர்களுக்கு, வேலை ஸ்தலத்தில் உடன் வேலை பணிபுரிபவர்களுக்கு, திருச்சபையில் ஸ்தல சபை போதகர் மற்றும் ஊழியர்களுக்கு கீழ்ப்படிவதன் மூலம் உறுதிசெய்யப்படுகிறது. நாத்தான்வேலை போல உத்தம குணத்தில் வேரூன்றுங்கள் உங்கள் வாழ்க்கை தேவனுக்கு பிரியமானதாக மாறும்.

**2. ஜெபத்தில் வேரூன்றுதல்: Be rooted in prayer** (ரோமர் 12:12)

ஜெபம் என்பது கிறிஸ்தவர்களின் கடமை அல்ல, மாறாக தேவனோடுள்ள உறவாகும். இயேசு கிறிஸ்து தம்முடைய பிதாவோடு தனித்து ஜெபிக்கும் பழக்கம் உடையவராக இருந்தார் லூக்கா 9:18; மத்தேயு 14:23. இயேசு தனக்கிருந்த அவசரமான நேரங்களிலும் கூட தனது ஜெப நேரத்தை நியமித்து தவறாமல் கடைபிடித்துள்ளார்.

அந்நிய தேசத்தில் மிக முக்கிய பொறுப்பில் நியமிக்கப்பட்ட தானியேல் தினமும் மூன்று வேளை ஜெபிக்கும் பழக்கம் உடையவராக இருந்தார் (தானி. 6:10). ஜெபத்தின் மூலமாக தேவனுடைய உதவியை நாடுகிறோம். ஜெபிக்கும்போது தேவனை அதிகமாய் சார்ந்து கொள்ளுகிறோம். திட்டமிட்ட சீரான ஜெபநேரம் உங்களை ஜெப வாழ்க்கைக்கு வழிநடத்தும். ஜெபத்தில் வேரூன்றுங்கள் ஜெயம் என்ற கனியை அனுபவியுங்கள்.

**3. அன்பில் வேரூன்றுதல்: Be rooted in love** (1 கொரி. 13:13)

அன்பு என்பது உறவுக்கு மிக ஆதாரமானது. அன்பு இல்லாதவன் தேவனை அறியான் (1 யோவான் 4:8). அவருடைய கற்பனையின்படி நடப்பதே அன்பு (2 யோவான் 6). தேவன் நம்மேல் வைத்த அன்பை விளங்கப்பண்ணினார். (யோவான் 3:16). அன்பு என்பது வெறும் உணர்ச்சி அல்ல, கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்ற தவறாக பயன்படுத்துவதும் அல்ல. பிறரை நேசிப்பதை விட Pet animals, Mobile, Bikes ஆகியவற்றை நேசிப்பது தற்போதைய கலாச்சாரமாக இருக்கிறது.

தேவனுடைய சாயலில் படைக்கப்பட்ட அனைவரையும் இயேசு நேசிப்பது போல பிறரை நேசிக்க கடமைப்பட்டுள்ளோம். Key to future is not programme but relationship. மனிதரை உண்மையாய் நேசிக்கும் தேவன், ஒருவருக்கொருவர் உண்மையாய் நேசிக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார். 1 கொரி.13 ஆம் அதிகாரம் அன்பின் தன்மைகளை விவரிக்கிறது. தேவனுடைய அன்பில் வேரூன்றி ஆவியின் கனிகளை மிகுதியாக கொடுங்கள்.

**4. சீஷத்துவத்தில் வேரூன்றுதல்: Be rooted in Discipleship** (லூக்கா 6:40)

அந்தியோகியா பட்டணத்தில் அப்.11:26 வசனத்தின்படி சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டது என வாசிக்கிறோம். சபைக்குள் புதிய நபராக வரும் ஒருவர், விசுவாசியாக மாறி, சீஷராகி, பின்பு ஊழியராக தேவ இராஜ்யத்தில் பிரயாசப்படுகிறார். இயேசு கிறிஸ்துவுக்கு சீஷராக வேண்டும் என்றால் தன் சிலுவை சுமந்துகொண்டு அவரை பின்பற்ற வேண்டும் (மத்.16:24). ஒரு மரத்தின் வலிமை உயரத்தை வைத்து அல்ல, அதின் வேர்களை வைத்தே உள்ளது போல ஒரு உண்மையான கிறிஸ்தவரின் அர்ப்பணிப்பு சீஷத்துவத்தில் உள்ளது. இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற அனைவரும் சீஷர்களாக அவருக்குள் நிலைத்திருந்து பிறரை சீஷர்களாக உருவாக்க வேண்டும்.

வேர்களாக கருதப்படும் உத்தமம், ஜெபம், அன்பு, சீஷத்துவம் ஆகியவற்றில் சிறந்து விளங்க விருப்பம் கொள்ளுங்கள். தேவனால் மேன்மையாய் உயர்த்தப்படுவீர்கள். பிரியமான வாலிபர்களே, நீங்கள் தான் இந்த சந்ததிக்கு தேவனுடைய சத்தமாக இருக்கிறீர்கள். You are the voice of God to this Generation. God bless you.



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20


ஹாய் குட்டீஸ்! எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? கடந்த மாத இதழில் வெளியான சிறுவர் கதையை வாசித்து பலர் உங்கள் கருத்துக்களை தெரியப்படுத்தினீர்கள். அவைகளுக்காக தேவனை துதிக்கிறேன். இந்த மாதமும் நன்னெறி கருத்தோடு கூடிய சுவாரசியமான கதை கூற விரும்புகிறேன். கதை கேட்க ஆயத்தமா? வாங்க போகலாம்.

ஒரு நாள் வகுப்பறையில் பாடம் நடத்திகொண்டிருக்கும்போது, ஆசிரியர் ஒருவர் தனது மாணவர்களிடம் இந்த கேள்வியை கேட்டார் “உங்களுக்கு மன்னிக்க முடியாத கோபம் யார் மேலும் இருக்கிறதா? சந்தர்ப்பம் கிடைத்தால் யாரையேனும் பழி வாங்கத் துடிக்கிறீர்களா?” என கேள்வியெழுப்பினார்.

வகுப்பு மாணவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் “ஆமாம்... அய்யா” என்றார்கள். ஆசிரியருக்கு மிகுந்த வியப்பு, இந்த சிறிய வயதில் இப்படியொரு நிலையா என பதறி போன ஆசிரியர், ஒவ்வொருவராக அழைத்து பேச விரும்பினார்.

அவ்வண்ணமே, ”மன்னிக்கவும் மறக்கவும் முடியாத அளவுக்கு எத்தனை கோபங்கள் உள்ளன?” என்று கேட்டார். ஒவ்வொருவரும் ஐந்து, பத்து என்று அடுக்கி கொண்டே சென்றார்கள்.

இப்படியொரு பதிலை ஆசிரியர் எதிர்பார்க்கவே இல்லை. இக்கால ஆன்லைன் விளையாட்டுகளும், அனிமேஷன் மூவிகளும் ஏற்படுத்திய தாக்கம் என உணர்ந்து கொண்ட ஆசிரியர், தன் மாணவர்களுக்கு பழிவாங்கும் எண்ணம் தவறு என்று புரிய வைக்க நினைத்தார். அங்கும் இங்கும் யோசித்து கொண்டே நடந்த ஆசிரியர், திடீரென யாரையோ தொலைபேசியில் அழைத்து, சில பொருட்களை எடுத்துவரும்படி கூறினார். அவர் கேட்டுக்கொண்ட பொருட்களும் சில நிமிடங்களில் வகுப்பறைக்கு வந்தது.

ஒவ்வொரு மாணவரிடமும் ஒரு பாலித்தீன் பையை கொடுத்தார், அந்நேரத்தில் வகுப்பறைக்கு ஒரு கூடை நிறைய தக்காளிகள் கொண்டுவரப்பட்டது. ‘யார்மீது எத்தனை பழிவாங்கும் எண்ணம் உள்ளதோ அத்தனை தக்காளிகளையும் தங்கள் பையில் எடுத்துக்கொள்ளுமாறு ஆசிரியர் அறிவுறுத்தினார்.

மேலும், இந்த தக்காளி பையை எப்போதும் உங்களோடே வைத்துக்கொள்ள வேண்டும், தூங்கும் போதும் அருகிலேயே வைத்திருக்கவேண்டும் என கட்டளையிட்டார். மாணவர்களும், ஏன்? எதற்கு? என கேள்வி கேட்காமல், தங்கள் தலையை ஆட்டிக்கொண்டே OK சார் என்றனர் மாணவர்கள் .

இந்த சம்பவம் நடந்து ஓரிரு நாட்கள் கூட முடியவில்லை. ஆனால், அடுத்தடுத்த நாட்களில் தக்காளிகள் அழுகி நாறத் துவங்கின. நாற்றம் அடிக்கும் பையுடன் வெளியே செல்ல மாணவர்கள் கூச்சப்பட்டனர். இன்னும் ஒரு நாள் போகவே, ஆசிரியரிடம் சென்று, பைகளைத் தூக்கி எறிய, இரு கரம் கூப்பி அனுமதி கேட்டனர். ஆசிரியர், தங்கள் மாணவர்களின் நிலையை கண்டு புன்னகைத்த வண்ணம் தன்னருகே அழைத்தார்.

'நாற்றம் வீசுபவை தக்காளி மட்டுமல்ல, உங்கள் பகைமை உணர்வும் பழி வாங்கும் குணமும் மனதுக்குள் அழுகி நாறிக் கொண்டிருக்கின்றன. நாற்றம் வீசும் தக்காளியை எப்படி தூக்கி எறிய வேண்டும் என விரும்புகிறீர்களோ, அப்படியே நாற்றம் வீசும் இத்தகைய மோசமான சுபாவங்களையும் தூக்கி எறிய வேண்டும் என்றார்.

ஆகவே, "பகை-பழியை நீங்கள் மறந்து மன்னித்து விடுவதாக இருந்தால், தக்காளி பையை தூக்கி எறியுங்கள்" என்றார்! அப்போது தான் மாணவர்களுக்கு மனத் தெளிவு பிறந்தது. உடனடியாக, தக்காளி பைகளை குப்பைத் தொட்டியில் வீசிய மாணவர்கள், தங்கள் பகைகளை மறந்து ஒருவரையொருவர் ஆரத் தழுவிக்கொண்டு வகுப்பறைக்கு திரும்பினர்.

அன்பு தம்பி தங்காய், பல தருணங்களில் நாமும் இப்படிதான் பழிவாங்கும் எண்ணத்தோடு காத்திருக்கிறோம். நமக்கு துரோகம் செய்தவர்களுக்கு துரோகம் செய்ய துடிக்கிறோம். பகைமை மறக்கவும், மன்னிப்பை கற்றுக்கொள்ளவும் இயேசு கிறிஸ்து நமக்கு கற்றுக்கொடுத்திருக்கிறார்.

''தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்'' (1பேதுரு 3:9).

மேற்கண்ட வசனத்தினை வாசிக்கும்போது உடல் சிலிர்க்கிறதல்லவா? ஆம், வேதாகமம் போதிக்கும் புத்திமதியினை தலைவணங்கி ஏற்றுக்கொண்டால் நம் வாழ்நாள் முழுவதும் சந்தோஷமாய் இருக்கலாம்.

இந்த மாத சிறுவர் பகுதி உங்களோடு நிச்சயம் பேசியிருக்கும் என நம்புகிறேன். உங்கள் தீர்மானங்களை, சாட்சிகளை 97503 81784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தியாக அனுப்புங்கள். அடுத்த இதழில் மற்றொரு சுவாரசியமான கதையோடு உங்களை சந்திக்க வருகிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக... டாட்டா...

---

## Tips for functioning as Teams

1. Value every member.
2. Affirm each other.
3. Know your role and don't try to do others' role.
4. Submit to authority and trust God.
5. Speak the truth in love.
6. Defend one another.
7. Be clear on the vision and support it.
8. Don't talk about others behind their back.
9. Believe the best in others and give them the benefit of the doubt.





# கற்கும் முறை - LEARNING STYLE


## Rev.ஜான் பரணீஸ்வரன்

உதவி இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்


கிறிஸ்துவுக்குள் அன்பு வாசகர்களே, நீங்கள் இரண்டு விதத்தில் மாணவர்களாக இருக்கலாம்.

1. பாட புத்தகத்தை கற்கும் பள்ளி, கல்லூரி மாணவர்களாக இருக்கலாம்.

2. வேத புத்தகத்தை கற்கும் கிறிஸ்துவுக்கு மாணவர்களாக இருக்கலாம்.

நாம் எப்படிப்பட்ட மாணவர்களாக இருந்தாலும், சில கற்கும் முறைகளை அறிந்துகொண்டு அதன்படி நேர்த்தியாய் கற்றுக்கொண்டால், வெற்றியாளர்களாய் சாதனையாளர்களாய் மாறமுடியும். இந்தக் கட்டுரையில் சில பொதுவான கற்கும் முறைகளையும், வேதம் போதிக்கும் சில கற்கும் முறைகளையும் அறிந்துகொள்வோம்.

**கற்கும் முறை - LEARNING STYLE**

சில பொதுவான கற்கும் முறைகள்

பொதுவாக மாணவர்கள், கீழ்கண்ட மூன்றுவித கற்றல் முறையை உடையவர்களாக இருப்பார்கள். அது நபருக்கு நபர் மாறும். இது வேதத்தைக் கற்போருக்கும் பொருந்தும்.

**அ) AUDITORY LEARNERS–கேட்பதினால் கற்றுக்கொள்பவர்கள்**

இவர்கள் பாடத்தை, செவிவழியாய் கேட்டு உள்வாங்கிக் கற்றுக் கொள்வார்கள்.

**ஆ) VISUAL LEARNERS–காண்பதின் மூலம் கற்றுக்கொள்பவர்கள்**

இவர்கள் பாடத்தை படவடிவில், காட்சி வடிவில் அமைத்துக் கற்றுக் கொள்வார்கள்.

**இ) TACTILE LEARNERS–செய்து பார்ப்பதின் மூலம் (அ) தொட்டு உணர்வதின் மூலம் கற்றுக் கொள்பவர்கள்**

இதை செயல் வழிக்கற்றல் முறை என்று சொல்கிறோம். எதையும் செய்து பார்ப்பதின் மூலம் கற்றுக்கொள்பவர்கள்.

**கற்கும் திறனை கண்டுபிடித்தல்:**

நமது கற்கும் திறன் எது என்பதைக் கண்டுபிடிக்க சிறப்பான பயிற்சிகள் உண்டு. ஆனாலும் நாம் கற்றுக்கொள்ளும் விதத்தைக் கவனித்தால், நாமே அதை அறிந்துகொள்ளலாம். ஒரு எளிய உதாரணத்தை நான் உங்களுக்குக் கூறுகிறேன். ஒரு வகுப்பறையில், ஒரு ஆசிரியர், ஒரு செம்பருத்திப் பூவை வைத்துப் பாடம் நடத்துகிறார் என்று வைத்துக்கொள்வோம். இந்த மூன்றுவித கற்கும் திறன் (learning style) உள்ளவர்களும் அங்கே இருப்பார்கள். எப்படிக் கண்டுபிடிப்பது?.

**AUDITORY LEARNER**–கேட்பதினால் கற்பவர், வேறு எங்கோ வேடிக்கைப் பார்ப்பதுபோல் தோன்றினாலும், செவிவழியாய் உள் வாங்கிவிடுவார். கேள்வி கேட்டால் சரியாய் பதில் சொல்லிவிடுவார்.

**VISUAL LEARNER**–பார்ப்பதினால் கற்பவர், ஆசிரியர் காட்டும் பொருளை நன்றாகப் பார்க்கவேண்டும். அப்போதுதான் புரியும், எனவே யாரும் மறைக்காத இடத்தில்

உட்காரப் பார்ப்பார்கள். ஏதாவது பொருள் (அ) படம் காட்டிப் பாடம் நடத்தினால் ஆர்வம் அதிகமாக இருக்கும்.

**TACTILE LEARNER**–செயல் வழி மூலம் (அ) தொட்டு உணர்வதின் மூலம் கற்பவர், ஆசிரியர் பாடம் நடத்திவிட்டு, எப்போது செம்பருத்திப் பூவைக் கீழே போடுவார் என்று பார்த்துக் கொண்டிருப்பார். கீழே போட்டதும் அதை எடுத்துப் பிய்த்து, இதுதான் அல்லிவட்டமா? இதுதான் புள்ளிவட்டமா? என்று தொட்டு உணர்ந்து கற்றுக்கொள்வார்.

**இந்த முறைகளை கற்பதில் பயன்படுத்துவது எப்படி?**

**1. AUDITORY LEARNER – கேட்பதினால் கற்பவர்கள்**

பாடத்தை "வாய்ஸ் ரெக்கார்ட்" செய்து, அதை மீண்டும் மீண்டும் கேட்டு, மனதில் பதிய வைக்கலாம்.

**2. VISUAL LEARNER – பார்ப்பதினால் கற்பவர்கள்**

பாடத்தை படவடிவில் (Mind Map) மாற்றிக் கற்றுக்கொள்ளலாம். அதற்காகத்தான் படம் வரைந்து பாகம் குறித்தல் முறையெல்லாம் கடைபிடிக்கப்படுகிறது.

**3. TACTILE LEARNER – செயல் வழியில் கற்பவர்**

வரைந்துப் பார்த்து, எழுதிப் பார்த்து, செய்து பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டும். இதனால் தான் படிப்பதில் (Theory and Practical) என்று இரண்டும் உள்ளது.

**வேதம் கூறும் சில கற்கும் முறைகள்:**

1. மத்.9:13 - **LEARN THE MEANING**–அர்த்தம் புரியாமலே படிக்காமல், கருத்து இன்னதென்று புரிந்துக் கற்றுக்கொள்ளுங்கள்.
2. மத்.11:29;30 - **TAKE THE YOKE AND LEARN**-நுகத்தை ஏற்றுக்கொண்டு கற்றுக் கொள்ளுங்கள். அதாவது படிப்பதை கடினமாக, சுமையாக நினைக்காமல், அதை ஒரு சுகமான சுமையாக மனதளவில் ஏற்றுக்கொண்டால் படிப்பது எளிதாகும்.
3. யோவான் 6:45 - **HEAR AND LEARN**–எந்தப் பாடத்தையும் கற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள், அதைக் கவனமாய் கேட்கவேண்டும். மந்தமாய் கேட்டால் புரியாது, மனதில் பதியாது.
4. 1கொரி.14:35–**TASK AND LEARN**–விசாரித்துக் கற்றுக்கொள்ளுங்கள். படிக்கும்போது எது புரியவில்லையோ? எது சந்தேகமோ? அதை நன்கு தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.
5. 1தீமோ.2:11–**KEEP QUIET AND LEARN**–மைதலோடு கற்றுக்கொள்ளுங்கள். படிக்கும் முன் மனதை அமைதிப்படுத்தி, அமைதியான சூழல், அமைதியான இடத்தை தேர்ந்தெடுத்துப் படியுங்கள்.
6. சங்.119:73–**LEARN WITH UNDERSTANDING**-உணர்ந்துக் கற்றுக் கொள்ளுங்கள். ஏதோ படித்து முடித்துவிட வேண்டும் என்று எண்ணாமல், உண்மைத் தன்மையை உணர்ந்து படியுங்கள்.
7. எரே.12:16–**LEARN WELL**-அறைகுறையாகவோ, ஏனோதானோ என்றோ படிக்காமல், எதையும் நன்றாய் கற்றுக்கொள்ளுங்கள்.

பயிற்சி செய்யுங்கள், பலனடையுங்கள். உங்கள் வாழ்வும் செழிக்கும்,

தேவநாமமும் மகிமைப்படும். அல்லேலூயா, ஆமென்.

## கிறிஸ்துவில் வளர 7 வழிகள்

பெற்றெடுக்கும் பிள்ளையிலிருந்து, புதிதாய் நடும் ரோஜா செடி வரை அனைத்திலும் வளர்ச்சியை எதிர்பார்ப்பது மனிதனுடைய நியாயமான ஆசை! அதுபோல கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்தவ வாழ்வில் வளர வேண்டுமென்பது தேவனுடைய விருப்பம்.

கீழ்க்கண்ட வழிகளை நாம் பின்பற்றும்போது கிறிஸ்துவுக்குள் வளர்ந்து நாம் கனி தருகிற விருட்சமாக மாற முடியும்.

1. விட வேண்டிய கெட்டவழிகளை அதிக பிரயாசத்தோடும், தேவ ஒத்தாசையோடும் விட்டுவிட வேண்டும். இதற்காக உபவாசமிருக்கவும் தயங்கக்கூடாது.

2. உங்களுடைய வழிகள் கர்த்தருடைய வழிகள்தானா என்பதை ஆராய்ந்து பாருங்கள். கர்த்தருடைய வழியில் உத்தமமாய் நடக்க உள்ளத்தின் ஆழத்தில் திட்டமான தீர்மானமெடுங்கள்.

3. ஜெபக்கூட்டங்கள் மற்றும் ஆராதனைகளில் அதிகமாய் கலந்துகொள்ள பிரயாசமெடுங்கள்.

4. அந்தரங்கத்தில் ஜெபிக்கும் தனி ஜெப வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளுங்கள். அனுதினமும் தவறாமல் வேத வசனத்தை வாசித்து தியானியுங்கள். அதிகாலை வேளையே தியானத்திற்கும் ஜெபத்திற்கும் ஏற்றது.

5. தேவ சமூகத்தில் உங்களைத் தாழ்த்தி ஒப்புக்கொடுங்கள். நானல்ல கிறிஸ்துவாகிய நீரே என்னில் பெருக வேண்டுமென்று மன்றாடுங்கள்.

6. கிறிஸ்துவின் சாயல் உங்களில் வளரட்டும். கிறிஸ்துவின் சுபாவங்கள் உங்களில் பெருகட்டும். அவரது குணாதிசயங்கள் உங்களது வாழ்வில் காணப்படட்டும்.

7. உங்களுக்கென்று ஒரு ஊழியத்தைத் தெரிந்துகொள்ளுங்கள். ஜெப ஊழியமோ, கைப்பிரதி கொடுப்பதோ, வியாதியஸ்தரை சந்திப்பதோ, சிறைச்சாலை ஊழியமோ எதுவானாலும் உற்சாகமாய் கர்த்தருக்கென்று செய்யுங்கள்.

பிரியமானவர்களே!

மேற்கண்ட எளிய ஆனால் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய இந்த காரியங்களை பின்பற்றுவோமானால் நாம் கிறிஸ்துவுக்குள் வளர்வது உறுதி. வளர்வதோடு மாத்திரமல்ல கனி கொடுக்கவும் முடியும்.

ஒருவேளை இதை வாசிக்கும் நீங்கள் வருடக்கணக்கில் பெயர் கிறிஸ்தவராய் வாழ்ந்து விட்டீர்களோ? இனியும் தாமதிக்க வேண்டாம். இன்றே மனம் திரும்புங்கள். வளர வேண்டிய வழியை அறிந்து கொண்ட பின்பும் மனம் கடினமாயிருக்க வேண்டாம்.



# சிறுவர்களின் மத்தியில் எழுப்புதல்


## Rev. பெகின் சாமுவேல்

இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்


ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். தமிழ்ப்பிரதேச சிறுவர் ஊழியங்களின் சார்பாக, பெற்றோர்களுக்கென்றே பிரத்யேகமாக எழுதப்படுகிற இந்தப் பகுதி உங்கள் அனைவருக்கும் பிரயோஜனமாக இருக்கும் என்று நம்புகிறேன். இந்த ஆண்டு நடைபெற இருக்கிற பைபிள் சாம்பியன்ஸ்ல் (BIBLE CHAMPIONS) தேர்வில் பங்கு பெற பிள்ளைகளை ஆயத்தப்படுத்துவீர்கள் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். இவ்வருடத்தில் நேரடியாக தேர்வு மையங்களான சபைகளுக்கு சென்று பிள்ளைகள் தேர்வு எழுத இருக்கிறார்கள். அதற்குரிய எல்லா ஆயத்த பணிகளும் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உங்கள் பிள்ளைகளின் பெயர்களை முன்பதிவு செய்து கொள்ளவும் கேட்டுக்கொள்ளப் படுகிறீர்கள். மேலும் இதுகுறித்த தகவல்களை அறிய எங்களை தொடர்பு கொள்ளலாம்.

கடைசி காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் அடிக்கடி கேள்விப்படுகிற ஒரு வார்த்தை எழுப்புதல் என்பதாகும். சபைகளில் எழுப்புதலைக் குறித்த செய்திகளை அடிக்கடி கேட்கிறோம். உலகத்தில் உள்ள எல்லா கிறிஸ்தவர்களும் இந்த நாட்களில் எதிர்பார்ப்போடு காத்திருக்கும் ஒரு காரியம் என்னவென்றால், எப்பொழுது எழுப்புதல் வரும் என்பதாகும். நாம் பொதுவாக நமது மனதில் நினைக்கிறோம் சபைகளில் பெரிய எழுப்புதல் உருவாகும். ஜனங்கள் கூட்டம் கூட்டமாக இரட்சிக்கப்படுவார்கள் என்பதாகும். ஆனால் மிகவும் என்னை சந்தோஷத்திற்குள்ளாக்கும் காரியம் என்னவென்றால் எழுப்புதலில் சிறுவர்களின் பங்கு மிகப்பெரியது என்பது. தேவன் சிறுவர்களின் மத்தியில் இந்த நாட்களில் ஒரு அசைவை உண்டுபண்ண விரும்புகிறார். நம் பிள்ளைகள் ஒவ்வொருவரும் இந்த எழுப்புதலில் பங்கு கொள்ள வேண்டும். அதற்கென்று இப்பொழுதே அவர்களை ஆயத்தப்படுத்துவோம். கண்டிப்பாக சிறுவர்கள் மத்தியில் ஒரு எழுப்புதல் வரத்தான் போகிறது. அந்த எழுப்புதலுக்கு நேராக நம்முடைய பிள்ளைகளை ஆயத்தப்படுத்தத்தக்கதாக சில காரியங்களை ஊக்கப்படுத்த நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

### 1. ஜெபத்தில் ஊக்கப்படுத்துங்கள்

எழுப்புதலில் முதன்மையான பங்கு வகிக்கும் ஒன்று என்னவென்றால், ஜெபமாகும். பாஸ்டர். பால் யாங்கி சோ, கொரிய தேசத்தை சேர்ந்தவர். 10 லட்சம் சபை அங்கத்தினரைக் கொண்டவர். கொரிய தேச எழுப்புதலில் பெரியபங்கை பெற்றவர். கொரிய தேசத்தின் எழுப்புதலுக்கு என்ன காரணம் என்று அநேகர் அவரிடம் கேட்பதுண்டு. அவர்கள் அனைவருக்கும் அவர் அளிக்கும் ஒரே பதில் ஜெபம்தான். அவர் சபையில் உள்ள சிறு பிள்ளைகள் தினமும் ஒரு மணி நேரம் ஜெபிப்பார்களாம். அப்.10:2-ல் கொர்நேலியுவின் குடும்பத்தைப் பாருங்கள்.

வீட்டாரனைவரோடும் கூட தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான். பிள்ளைகளுக்கு ஜெபிக்க கற்றுக்கொடுங்கள். ஜெபத்தின் மேல் வாஞ்சையை ஏற்படுத்துங்கள்.

### 2. விசுவாசத்தை ஊக்கப்படுத்துங்கள்

சிறுவர்கள் எதையும் எளிதாக சந்தேகிக்கமாட்டார்கள். நாம் கூறுவதை அப்படியே நம்புவார்கள். தேவன் அற்புதங்களை நடத்த கடுகளவு விசுவாசம் இருந்தால் போதும். பெரிய மலைகளை பெயர்க்க முடியும் என்று கூறுகிறார். சிறு பிள்ளைகளின் விசுவாசத்தை செயல்படுத்த அவர்களை ஊக்கப்படுத்துங்கள். பெரிய அற்புதங்களை தேவன் அவர்களை கொண்டு செய்வார்.

### 3. தேவ வல்லமையை பயன்படுத்த ஊக்கப்படுத்துங்கள்

சிறுவர்களின் விசுவாசமுள்ள ஜெபத்தின் மூலமாக தேவன் பெரிய காரியங்களை செய்வார். ஆனால் தேவ வல்லமையை பெற்ற சிறுவர்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களை செய்ய முடியும். சிறுவர்கள் இயேசுவிடம் வரும்போது சீஷர்கள் தடைசெய்தனர். அவர்களை அற்பமாக எண்ணினர். ஒரு நாளும் சிறுவர்களை தரக்குறைவாக எடைபோடாதீர்கள். அவர்களுக்குள்ளிருக்கும் தேவன் பெரியவர். அவர் பெரிய காரியங்களை செய்வார். அவர்கள் மூலமாக குருடர்கள் பார்வையடைவார்கள். மரித்தோர்கள் உயிரோடு எழும்புவார்கள்.

### 4. ஊழியத்தில் ஊக்கப்படுத்துங்கள்

சபையில் நடைபெறும் எல்லா ஊழியங்களிலும் அவர்களின் பங்களிப்பும் இருக்கட்டும். சபையின் பாடகர் குழு, துண்டுப் பிரதி ஊழியங்கள், ஆஸ்பத்திரி ஊழியங்கள் என்று எல்லாவற்றிலும் அவர்களும் தடையில்லாமல் கலந்துகொள்ள ஊக்கப்படுத்துங்கள். மற்றவர்களுக்காக, வியாதிப்பட்டவர்களுக்காக ஜெபிக்க அவர்களுக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுங்கள். சிறுவர்களை இவ்வாறு பயிற்றுவியுங்கள். ஏனெனில் இனி வருகிற காலம் எழுப்புதலின் காலம். இது நடந்தே தீரும். இதில் உங்கள் பிள்ளைகள் பங்கு பெற பிரயாசப்படுங்கள். கர்த்தர்தாமே நம்மனைவரோடுங்கூட இருப்பாராக. ஆமென்.

---

## போட்டி எண் : 94 (சரியான விடைகள்)

1.அன்போ (8:1)|2.தேவனுடைய ஆலயம்(3:17)|3.ஆகாத சம்பாஷனைகள் (15:33)|4.அறிவு(8:1);|5.போஜனமானது(8:8)|6.தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல (4:20)|7.நிறைவானது, குறைவானது (13:10).|8.சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது (1:18)|9.சகலமும் (14:40).|10.கொஞ்சம் புளித்தமா (5:6)|11.விக்கிரகாராதனைக்கு (10:14)|12.கலகத்திற்கு, சமாதானத்திற்கு (14:33)|13.மனுஷருக்கு (7:23)| 14.சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு (9:16)|15.நிதானித்து அறிந்தால் (11:31)|16.நான், அப்பொல்லோ, தேவனே (3:6)|17.அன்போடே (16:14)|18.இலட்சணமுள்ளவைகளுக்கு (12:24)|19.சமாதானமாயிருக்கும்படிக்கே (7:15)|20.எல்லாவற்றையும் ஆராய்ந்து (2:15).

## போட்டி எண் : 94 (சரியான விடை எழுதியவர்கள்)....

**செங்கோட்டை:** E.கலா; கிரிஜா; ப்ரீடா, S.இந்திரா; N.ரோஸ்லின்;S.அமுதா; S.ஜெயா; T.சாந்தி; K.மகேஸ்வரி; ர.ஜெயசிலின்; G.முத்துலெட்சுமி; M.கனகவல்லி; M.சுமதி; A.ஹெப்சி; D.பிரபா; M.ராதாமணி; பிரேமலதா; பிரியா; R.மயில்; R.ராணி; S.கலா; K.ராஜீ; J.சுமதி; T.சாராள்; T.கலா; சித்ரா பிளஸ்சி; G.ஏஞ்சல்; L.குளோரி; பூங்கோதை மௌலி; மாது; கோகிலா; V.விஜி; S.முத்துலெட்சுமி; M.எஸ்தர் ;| **ஸ்ரீ வில்லிபுத்தூர்:** நித்யா; குளோரி; பாஞ்சாலி; கண்மணி; புஷ்பா; எஸ்தர் சிநேகா; நெல்சன் செல்வராஜ்; ஜெயராணி; தேவபிரியா; டெய்ஸிராணி; ஜெஸிக்கா ஆக்னஸ்; நாச்சியார்; இவாஞ்சலின் ஆக்னஸ்; மெசி; கிறிஸ்டிபிரியா; அனிதா; எஸ்தர் இந்திரா; மாதவி; சுபா;| **கடையநல்லூர்:** S.வேணி; ரெஜினா; வினோலியா; ஆஷாதேவி; சுகன்யா; பெல்சியா; பிரேம்; ரமணி; செலினா; T.வேணி; தனம்; தங்கராஜ்; சாமுவேல்; | **திருநின்றவூர் :** ரூத்; சரண்யா; ஏடா டாரியா; எஸ்தர் பவானி; வின்சி; அனுலா; லீலா; கேத்ரின்; ஷீபாரென்ஸ்; | **எடப்பாடி:** மாலதி; ரெஜினா; பாக்கியம்; புஷ்பா; லீதியாள்; சுதா; ரூத்; விஜயா; பிரியா; புஷ்பா; ;|**சென்னை:** மேரிகுட்டி; சற்குணம்; சுரேந்திரபோஸ்; ரேணுகா; மெர்லின் ஹெலன் பிரீத்தியா; |**புளியங்குடி:** சுந்தரி; ஜெபஞானம்; எஸ்தர்ராணி; ஞானமணி; ஜெயமணி; **மதுரை:** கிரேஸ் தங்கம்; விமலாராய்ஸ்; கனகவல்லி; மேரி; | **KTC நகர்:** பிரேமாரூத்: சில்வியா; ஜமி | **ஆறுமுகநேரி:**ஜாய்ஸ்மேரி; எஸ்தர் வெண்ணிலா; பிரேமா; பானுமதி; செல்வபிரியா; |**ஆண்டிபட்டி:** தேவபாக்கியம்; மேரி; டெய்ஸி; பூங்கொடி; |**மதுராந்தகம்:** ஹரிணி மெர்லின்; ராணி; சுனிதா ரோஸ்லின்; சாந்தி | **ஏர்வாடி:** காபிரியேல் அந்தோணி; மரகதம்; |**மரத்துக்குளம்:** கிரேஸ்மேரி; சரண்யா; சுகன்யா; |**திருவாரூர் :** அருண்; ஷீபா; பாஸ்டியன்; | **வில்லியனூர் :** தீபா; ஷீபா; |**கிச்சிப்பாளையம்:** கிறிஸ்டல்ஜான்; ஜோஸ்பின் கிரேஸ்மேரி; | **நாகர்கோவில்:** ஷாமினி; ராதிகா; |**தூத்துக்குடி:** தாஸ்; மெசுல்லாசோபி; |**திரேஸ்புரம் :** சில்வெஸ்டர்; புரூசிமா | **உத்திரமேரூர்** ஜெனிட்டா ஜெபசீலி; ஜூலியட்; |**செய்துங்கநல்லூர் :** வனிதா; G.சாந்தி; K.முத்துகுமாரி; |**வெள்ளாங்குறிச்சி :** கிறிஸ்டினா; ரித்மா;| **திருநெல்வேலி:** அல்போன்ஸ்; சாராள் |**நாகமலை:** விஜிலா; ஆனந்தி | **கீழ்வேளூர்:** எஸ்தர்; சிவசூர்யா; |**நாசரேத்:** எஸ்தர்; தாசன்மோசஸ்; | **வத்ராப்:** ஜெஸ்சி; கல்ப்பனா; தர்ஷினி; | **ஆலங்குளம் (வி):** பிளாரன்ஸ்; கிருபா | **அச்சிறுப்பாக்கம் :** சுதா; திரேசா; | **வளசரவாக்கம்:** நிர்மலா எஸ்தர்; | **பாளையங்கோட்டை:** ஹில்டா எலிசபெத்; |**பெருங்குளம்:** பியூலா ஜோபாய்; | **சூளைமேடு:** அருள்மேரி; |**இறச்சகுளம் :** ஜேஸ்மின்; |**திசையன்விளை:** ஜெயசீலிதாசன்; |**மூக்குப்பேரி:** சுசிலா; செல்லத்தாய்ராணி; |**தேவகோட்டை:** மேரி; |**TNபாளையம்:** சுஜா; |**வேப்பனப்பள்ளி:**சுகிர்தா |**வில்லிவாக்கம்:**சாரா மடோலின்; | **தேனி:** தனம்; |**பழனி:**பிரீத்தி |**சாத்தூர் :** சரோஜா; |**தாழையூத்து:** சகுந்தலா; |**திருச்சி:** ஜஸ்டஸ் டேனியல்; |**கொளத்தூர் :** கிருஷ்ணவேணி | **கம்பம்:** ஜோதிமணி; |**அம்பூர் :** கிரிஜா சத்யா; |**சுரண்டை :** குளோரிஞானம் | **குற்றாலம்:** வேளாங்கன்னி; ரூத்; |**பாவூர்சத்திரம்:**ஜெசிலி; |**பசுவந்தனை:** கிருபா; | **திருவள்ளூர் :**திலகாவதி; ரூத்ஜெபகனி |**விருதுநகர் :** ஜேசுராஜ்; |**குமந்தாபுரம்:** விக்டோரியா; |**நேசமணிநகர் :** ஏஞ்சல்குமார்; |**கல்லல்:** அபிஷாக்| **சின்னாளப்பட்டி:** சலோமி;|**மூலக்கரைப்பட்டி:** எபனேசர் மோசஸ்: |**வல்லம் (த):** விஜி; |**அகஸ்தியர்பட்டி:** நிர்மலா; பத்மாவதி; |**களக்காடு:**ஜெயமெர்சி; |**புதூர் (தூ):** கீர்த்தனா |**பரமத்திவேலூர் :** பாமா; |**பெருமாள்பட்டி (திருவள்ளூர்) :** நாகஜோதி; |**அரசூர்:** ரோஸ்லின்; |**கட்டப்பெட்டு :** புஷ்பமாலா; |**கடாட்சபுரம் :** ரேவதி; சுசிலா; |**ஆத்தூர் (சே) :** பிளாரன்ஸ்;| **பழையகாயல்:** எலிசபெத்; |**அந்தநல்லூர் :** சாந்தி; |**திருவண்ணாமலை:** பேபி ஷகிலா; |**பந்தை (களக்காடு) :** விமலாபாய்| **பெரியகுளம் ;** மனோகாசிராஜ்; |**நெல்வாய்:** அமலா; | **ஒசூர் :** ஜெமி; |**கொங்கந்தான்பாறை:** சந்திரா; | **பாப்பான்குளம் :** பஸ்மத் **பேரையூர் :** அன்னாள் ; | **ஈரோடு :** ரேச்சல்; |**ஏர்காடு :** பெட்ரீசியா; |**திண்டிவனம் :** சாராள் அறிவுச்செல்வி;|**காங்கேயம் :** ராஜமணி; |**புதுக்கோட்டை :** பெனாயா

## பரிபூரண ஜீவன் போட்டி எண் -95

2 கொரிந்தியர் முழுவசனத்தை இருப்பிடத்துடன் விடை எழுதவும்

1. ____________ உத்தமன்.
2. ____________ நித்தியமானவைகள்.
3. ____________ தேவன் உங்களோடேகூட இருப்பார்.
4. ____________ நடக்கிறோம்.
5. ____________ ஐக்கியமேது?
6. ____________ அல்லவே.
7. ____________ எழுதியிருக்கிறபடியாகும்.
8. ____________ குருடாக்கினான்.
9. ____________ தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.
10. ____________ மனமுறிவடைகிறதில்லை.
11. ____________ யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறோம்.
12. ____________ நற்கந்தமாயிருக்கிறோம்.
13. ____________ எல்லாம் புதிதாயின.
14. ____________ மரணத்தை உண்டாக்குகிறது.
15. ____________ விடுதலையுமுண்டு.
16. ____________ தேவன் பிரியமாயிருக்கிறார்.
17. ____________ நம்பியிருக்கிறோம்.
18. ____________ அவருக்கு ஸ்தோத்திரம்.
19. ____________ பாவமாக்கினார்.
20. ____________ தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்.

---

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 8.10.2022

சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள்
தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும்.



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**


**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## Madurai East & Palayamkottai Section Children Camp













## Family Camp - Trichy South Section







Registered News Paper Regd. No. 8206 / 62




## Chengelpet Section Youth Camp



BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165